
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 26 இதழ் - 4 ஏப்ரல் 2013

தனிப் பிரதி ரூ. 9/-



" ...காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்பதைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை "

" என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லையென்று, உங்களுக்குச் சொல்கிறேன் " (மத்தேயு 6 : 28, 29)

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !

# பதினாறாம்
# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள்
## & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்,

ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

**நாள் : மே 6,7,8 - 2013 ( திங்கள், செவ்வாய், புதன் )**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 250 /-

சிறியவர்கள் ரூ. 150 /-

உணவும், தங்குமிடமும் இலவசம்

**ஆசானின் அறிவுரையிலே....**


1. ஆசிரியர் உரை............1
2. ஏன் நாங்கள் குரல் இசையை.... 9
3. பெண்கள் பகுதி...............13
4. வாலிபர் பகுதி....................16
5. சிறுவர் பகுதி....................19
6. குணாதிசயம்..............21
7. நிழலும், நிஜமும் ...........24
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......29


**முகாமின் சிறப்பம்சங்கள்**

- ★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- ★ தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வருகை தரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
- ★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் வல்லமையான தேவச் செய்திகள்.
- ★ தேவ பக்தியைத் தூண்டும் ஆவிக்குரிய பாடல்கள்.
- ★ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- ★ பெண்கள், வாலிபர்கள், வாலிப பெண்களுக்கென தனித்தனி வகுப்புகள்.
- ★ சிறு பிள்ளைகளுக்கு சிறப்பு வகுப்புகள். (போட்டியும், பரிசுகளும் உண்டு)
- ★ **பெண்களுக்கு தனி இடவசதி.**
- ★ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு கட்டணத்துடன் கூடிய தனித்தனி அறைகள்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor


86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 26 APRIL 2013 Issue - 4**


ஆசிரியர் உரை

## இப்பொழுது அறிந்திருக்கிறேன்

" இப்பொழுது ", " அப்பொழுது " மற்றும் " எப்பொழுது" என்னும் தமிழ் வார்த்தைகள் நம் அன்றாட பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தப்படும் வார்த்தைகள். நாம் ஒவ்வொரு வரும் இவ்வார்த்தைகளை அவ்வப்பொழுது பயன்படுத்திக் கொண்டு தான் வருகிறோம். இவ்வார்த்தைகளுள் " இப்பொழுது " என்னும் வார்த்தை, அதன் தன்மையில் சற்று விலகி நின்று வேறுபடுகிறதை நாம் கவனிக்க முடியும். ஆம், இவ்வார்த்தை, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்காகப் பயன்படுத்தப்படும் ஒன்றாக மேலெழுந்தவாரியாகத் தெரிந்தாலும், உண்மையில் இன்னும் கூடுதலான பொருளைக் கொண்டதாகவே இருக்கிறது. எப்படியெனில், "இப்பொழுது, நீ யார் என்று தெரிகிறது " என ஒருவர் ஒருவரைப் பார்த்துச் சொல்லும்போது, அப்படிச் சொல்லுகிறவர் அச்சந்தர்ப்பத்தில் நடந்ததை மாத்திரம் கணக்கில் கொண்டு இப்படியாகச் சொல்லாமல், இதற்கு முன் நடந்த வைகளையும் மனதில் சீர்தூக்கிப் பார்த்தே இப்படிப் பேசுகிறவராக இருக் கிறார். அதாவது, இதற்கு முன் உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய வைகள் தெரிந்து கொள்ளப்பட வேண்டிய அளவுக்கு தெரிந்து கொள்ள முடியாமற் போய் விட்டது! இப்பொழுது பளிச்செனத் தெரிந்து விட்டது என்பதே அதன் பொருள். அப்படித் தானே!

சரி, நான் இங்கு சொல்லுகிற இப்பொருளின் அடிப்படையில் தான் "இப்பொழுது " என்ற வார்த்தையைப் பரலோகத்தின் தேவனும் ஒரு கட்டத்தில் பயன்படுத்தியிருக்கிறார் (ஆதி. 22:12). நாம் இப்படியாக வாசிக்க முடியும். "அப்பொழுது அவர் பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப்

பயப்படுகிறவன் என்று " இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்றார். இவ்வார்த்தைகள் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமிடத்தில் பேசப்பட்டிருக்கிறது.

ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, ஆபிரகாமுக்கு 75 வயது நிரம்பிய நிலையில் நான் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்று அழைத்த தேவன், அவனுக்கு 100 வயது ஆன போது, அதாவது, 25 ஆண்டுகள் கழித்து, நெஞ்சை உலுக்கி எடுக்கும் மிகக் கடுமையான ஒரு சோதனைக்குப் பின் தான், " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொது அறிந்திருக்கிறேன் " என்று சொல்லியுள்ளார்.

அப்படியானால், அந்த 25 ஆண்டுகளில், ஆபிரகாம் யார் என்பதை தேவன் தெரிந்து கொள்ளும்படியான அளவில் ஒரு காரியத்தையும் அவன் செய்யவில்லையா என்ற கேள்வி எழுகிறது. ஆனால், ஆபிரகாமின் வாழ்க்கையை உற்று நோக்கும் போது, அவன் பல பக்தி காரியங்களில் தன்னை ஈடுபடுத்தியிருக்கிறான் என்று பலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆம், தேவ அழைப்பை ஏற்று, ஆபிரகாம் கானானியர் தேசத்துக்கு வந்த போது, தேவன் தரிசனமாகி, " உன் சந்ததிக்கு இந்த தேசத்தை கொடுப்பேன்" என்றார் (ஆதி. 12:7) அங்கே, ஆபிரகாம் கர்த்தர் கேட்காமலே, அவருக்கு ஒரு " பலிபீடம் " கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான் என்று வாசிக்க முடியும் (ஆதி. 12:7,8). தேவனுக்குப் பயப்படும் பயம் இல்லாமல், ஆபிரகாம் இப்படித் தொழுதிருக்கமாட்டான். ஆனாலும், தேவன் " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் " என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று அப்பொழுது கூறவில்லை.

இன்னும், ஆதியாகமம் 13ம் அதிகாரத்தில், தன் சகோதரனுடைய மகனும், தனக்கு வயதில் இளையவனும், தன்னால் அழைத்து வரப்பட்ட வனும், தன்னிமித்தம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவனுமான லோத்து காரியத்தில், " நாம் சகோதரர் " என்ற ஒரே காணத்திற்காக, தன் உரிமை யையும், மரியாதையையும் விட்டுக்கொடுத்து, மிகுந்த " பெருந்தன்மை யோடு " நடந்து கொண்டான் (ஆதி. 13:8,9). தேவன் அப்பொழுதும், " நீ தேவ னுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று சொல்லவில்லை. அடுத்து, " உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் " என்று தேவன் வாக்குக் கொடுத்து (ஆதி. 12:2). வருடங்கள் பத்துக்கு மேலாகியும் ஒன்றும் நிறைவேறாத நிலையில், " .... நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி; உன் சந்ததி இவ்வளவாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான் அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் ". (ஆதி. 15:6). இதையும் ஆபிரகாம் விசுவாசித்தான். ஆனால், இங்கேயும், " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக் கிறேன் " என்று பரலோகத்தின் தேவன் சொல்லவில்லை.

மேலும், தேவன் கட்டளையிடுகிறார் அதற்குக் கீழ்ப்பட்டே ஆக வேண்டும் என்னும் ஒரே காரணத்திற்காக, எவ்வித மருத்துவ வசதியும் இல்லாத அந்தக் காலத்தில், அறுவைச் சிகிச்சை பற்றிய எவ்வித அறிவும் தனக்கு இல்லாத நிலையில், நுனித்தோலை அறுத்தெறியும்

விருத்தசேதனத்தைத் தான் செய்து கொண்டதோடு நிற்காமல், அதே தேவனுடைய கட்டளைக்கு முழுமையாகக் கீழ்ப்படியும்படியாய் தன் வீட்டிலிருந்த ஆண் மக்கள் அனைவருக்கும் விருத்த சேதனம் பண்ணினான் (ஆதி. 17:23,24), இங்கேயும் தேவன், " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று சொல்லவில்லை. இதையே வேறு விதமாகச் சொல்வதென்றால், ஆபிரகாமின் இது வரைக்குமான பக்திச் செயல்பாடுகள் நம்முடைய பார்வையில் மிகப்பெரிய காரியங்களாகவும், அசாதாரண பக்தி இலட்சணங்களாகவும் தெரிந்தாலும், தேவனுடைய பார்வையில், " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்தி ருக்கிறேன் " என்று சொல்வதற்குப் போதுமானதாயிருக்கவில்லை. நம்மு டைய பார்வைக்கும், தேவனு டைய பார்வைக்கும் உள்ள வேறுபாட்டை இங்கே நாம் கவனித்தே ஆக வேண்டும்.

பின்னே, எப்பொழுது தான் சொன்னார் என்கிறீர்களா? அதைத் தெரிந்து கொள்ள நாம் ஆதியாகமம் 22 ம் அதிகாரத்திற்குச் செல்ல வேண்டும். அங்கே, மனித வரலாற்றில் வேறு யாருக்கும் வராத ஒ கடுமையான சோதனை விவரிக்கப்பட்டிருக்கிறது. இச்சோதனையை மிகுந்த விசுவாசத் தோடு எதிர்கெண்டு ஆபிரகாம் வெற்றி கண்டார். ஆம், அங்கே தேவன் வாக்குக் கொடுத்து, 25 ஆண்டுகள் அந்த வாக்குக்காகக் காத்திருக்கும்படி செய்து, அதன் பிறகு அந்த ஏக குமாரனைக் கொடுத்து, அவனைக் கையிலே ஏந்தி, மார்பிலே அணைத்து, தோளிலே சுமந்து, கொஞ்சி விளையாட அனுமதி கொடுத்து, அந்தப் பிள்ளையின் உயிரோடு தன்னுடைய உயிரும், தன் மனைவியாகிய சாராளுடைய உயிரும் பின்னிப் பிணைந்த நிலையில், " ..... நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார் " (ஆதி. 22:2). தான் முழு நம்பிக்கை வைத்து வழிபட்ட தேவன் இப்படியாகக் கேட்ட போது, ஆபிரகாமுக்கு அது எப்படிப் பேரிடியாய் இருந்தி ருக்குமென்று நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அதை அப்படியே விவரிப்பதற்கு எனக்குப் போதுமான அறிவும் இல்லை.

ஆனால், தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்கு, " ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின் மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும், தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு, தகன பலிக்குக் கட்டளைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்துக்குப் புறப்பட்டு போனான் " (ஆதி. 22:3) என்று பார்க்கிறோம். இப்படிப் புறப்பட்டுப் போனவன் தன் விசுவாச உறுதியில் இம்மியளவும் பிசகாமல், செய்ய வேண்டிய அனைத்தையும், பேசவேண்டிய அனைத்தையும் தேவன் எதிர்பார்த்தபடி அப்படியே நிறைவேற்றி, " தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான் " (22:10). அப்பப்பா, ஆபிரகாமின் இந்த பக்திச் செயல்பாட்டை என்னவென்று சொல்வது, எப்படித்தான் விவரிப்பது? மறுபடியும் சொல்லு கிறேன், என்னால் முடியாது.

இச்சோகச் சம்பவத்தின் முடிவிலே தான், கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டார். இங்கு கூட ஆபிரகாம், தன் கோபத்தையோ, வெறுப்பையோ, அதிருப்தியையோ வெளிப்படுத்தவில்லை.

“ இதோ, அடியேன் ” என்றே பதிலளித்துள்ளார். ஆபிரகாம், யோபு போன்றவர்களெல்லாம் எப்படி இவ்வளவு தேர்ந்த பக்தியோடு வாழ்ந்திருக்கிறார்களோ தெரியவில்லை! நாமெல்லாம் என்றைக்கு இந்த நிலையை அடையப் போகிறோமோ, அதுவும் புரியவில்லை! ஆனால், தேவ பக்தியுள்ள ஒருவன் இப்படித்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இதற்காக முயற்சித்தால் நாமும் அந்த நிலையை நிச்சயமாக அடைய முடியும்.

“ அப்பொழுது கர்த்தர்; பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று **இப்பொழுது** அறிந்திக்கிறேன் என்றார் ” (22:12).

“ இப்பொழுது அறிந்திருக்கிறேன் ” என்று தேவன் எப்பொழுது சொல்லியுள்ளார் என்பதை கவனித்தீர்களா? தான் ஒரு சிறந்த விசுவாச வீரன் என்று ஆபிரகாம் 35 ஆண்டுகளுக்கும் மேலான தன் அழைப்பு வாழ்க்கையில் பல கட்டங்களில் வெளிப்படுத்தியிருந்தாலும், தேவன் அவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு அல்லது சேர்த்துக் கொண்டு, “ நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் ” என்று சொல்லாமல், ஈசாக்கை ஆபிரகாம் மனதிலே பலி செலுத்தினதற்குப் பிறகே இப்படிச் சொல்லியுள்ளார். இது தானே உண்மை!

ஆகவே, ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலியிட்ட இசம்பவத்தில், அவன் எப்படியெல்லாம் நடந்து கொண்டான் என்பதை கவனித்தால், நாமும் அவ்விதமாக நடந்து, தேவனுடைய பார்வையில் அவருக்குப் பயப்படுகிறவர்களாகக் காணப்பட முடியும். அது தான் முக்கியம் நமக்கு நாமே பக்தியுள்ளவர்களாகக் காணப்படுவதும், நம் குடும்பத்தாரின் பார்வையில் நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் காணப்படுவதும், சமுதாயத்தின் பார்வையில் நாம் அப்படியாக இருப்பதும் போதுமானதல்ல. ஆகையால், ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலி செலுத்திய சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் ஒரு மூன்று பாடங்களை மாத்திரம் இப்பொழுது கவனிப்போம்.

## I ஆபிரகாம் செவி கொடுத்துச் செயல்பட்டான் (வச 1,3)

“ இப்பொழுது அறிந்திருக்கிறேன் ” என்று தேவன் சொல்லத்தக்க அளவில், ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலியிட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவன் தேவனுக்குச் செவிகொடுத்து, தேவனுக்காகச் செயல்பட்டான் என்பது.

தேவனுக்காகச் செயல்பட விரும்பும் ஒருவன் முதலாவது தேவனுக்குச் செவி கொடுக்க வேண்டியது அவசியம். செவி கொடுத்தலில் பிரச்சினை வந்துவிடுமானால், செயல்படுவதில் கண்டிப்பாகத் தவறு வந்து சேரும். இதற்குச் சிறந்த உதாரணம் சவுல் ராஜா. தகப்பனுடைய கழுதையைத் தேடிக் கொண்டு போனவனைக் கர்த்தர் ஒட்டுமொத்த இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஆக்கியிருந்தும், அதன் மேன்மையை உணராமல், கர்த்தர் அவனுக்கு இட்ட கட்டளையைப் புறக்கணித்தான். (1 சாமு. 15:11). அப்பொழுது கர்த்தருடைய தீர்க்கனாகிய சாமுவேலால் எப்படி

கழிந்து கொள்ளப்பட்டான் என்று கவனியுங்கள். " அதற்குச் சாமுவேல்; கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் " என்று (1 சாமு. 15:22) செவி கொடுத்தலின் மேன்மை விளங்குகிறதா?

இன்னும், செவிகொடுத்தலுக்கும், செயல்படுவதற்கும் மற்றுமோர் உதாரணம் சபை ஆரம்பிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த 3000 பேர். இன்றளவும் இவர்களைப் பற்றி நாம் பெருமையாகப் பேசுகிறோம். அதிலே நியாயம் இருக்கிறது. ஆனால், இதற்கு அடிப்படை என்ன? அந்நாளில், அந்த மகா பிரசங்கத்தை ஆரம்பிப்பதற்கு முன் அப்போஸ்தலர்களின் பிரதிநிதியாகச் செயல்பட்ட பேதுரு தன் பிரசங்கத்தை எப்படி ஆரம்பித்தார் என்று பாருங்கள். " அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று, அவர்களை நோக்கி உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, *என் வார்த்தைக்குச் செவி கொடுங்கள்* " (அப். 2:14). ஒருவேளை, அங்கே கூடியிருந்த ஏனைய எல்லோரையும் போல் இந்த 3000 பேரும் செவி கொடாமல் போயிருந்தால் என்ன ஆகியிருந்திருக்கும்? கீழ்ப்படிந்திருக்க முடியுமா? சபையானது ஆரம்பமாகியிருக்குமா? ஆக, தேவ காரியங்களில், தேவ சத்தத்திற்குச் செவிகொடுப்பது மிகவும் அவசியம்.

அப்படியானால், அருமையானவர்களே, நாம் செவி கொடுக்கிற, அதாவது தேவனுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும் செவி கொடுக்கிறதில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு அப்போஸ்தலன் பிரசங்கத்திற்குச் செவிமடுத்துக் கீழ்ப்படிந்த யூதர்களைப் போல் உள்ளோமா அல்லது இயேசு கிறிஸ்துவுக்கு முதல் இரத்த சாட்சியாய் மரித்த ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்று ஒரு மகாப் பிரசங்கம் செய்தபோது, வணங்காகக் கழுத்துள்ளவர்களாக இருந்து, இருதயத்திலும், செவிகளிலும், விருத்தசேதனம் பெறாமல், பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்று, தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொள்ளாமற் போன (அப். 7:51,53) யூதர்களைப் போல இருக்கிறோமா? நம்முடைய நிலையைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

" நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று தேவன் ஆபிரகாமிடத்தில் சொன்னதின் இரகசியம் அவனுடைய செவி கொடுத்தலிலே தான் ஆரம்பமாகியுள்ளது. தேசத்தை விட்டும், ஊரை விட்டும், குடும்பத்தை விட்டும் நீ வா என்று தேவன் அழைத்த போது, அதற்குச் செவி கொடுத்து எப்படிக் கீழ்ப்படிந்தானோ, அதே செவி கொடுத்தல், உன் வீட்டிலி ருக்கும் நான் கொடுத்த குமாரனைக் கொன்று போடு என்று கேட்ட போதும் அப்படியே மாறாமல் இருந்தது. தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிவதில் ஆபிரகாம் எந்தளவுக்கு உண்மையுள்ளவனாக இருந்துள்ளான் பாருங்கள். செவி கொடுத்தலில், குறிப்பாக, தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்துக்கும் செவிகொடுத்து கீழ்ப்படிவதில் ஆபிரகாமின் மாதிரியை நாம் ஒவ்வொருவரும் பின்பற்றத் தீர்மானிப்போம்.

## II ஆபிரகாம் தேவன் மீது முழு நம்பிக்கை வைத்தான் (வச. 7,8)

" இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று தேவன் சொல்லத்தக்க அளவில், ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலியிட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், தேவன் மீது நம்பிக்கை வைத்துச் செயல் பட்டான் என்பது.

ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலியிட்ட சம்பவத்தில் மிகவும் நெகிழ்ச்சியான தருணம் வசனங்கள் 7,8 தான். தன் தேவன் மீதான ஆபிரகாமின் நம்பிக்கை இவ்வசனங்களில் பொங்கி வழிகிறது. ஆனால், வசனம் ஐந்திலேயே ஆபிரகாமின் நம்பிக்கை வெளிப்படத் துவங்கி விட்டது. "அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி; நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய், தொழுது கொண்டு, உங்களிடத்திற்குத் திரும்பி வருவோம் என்றான் " (ஆதி. 22:5). எந்த நம்பிக்கையில் ஆபிரகாம் இப்படிப் பேசினான்? ஒருவேளை, தன் நோக்கத்திற்கு அவனுடைய வேலைக்காரர்களால் இடையூறு வந்து விடக்கூடாது என்று எண்ணி இப்படிச் சொன்னதாகவே வைத்துக் கொண்டாலும், வசனங்கள் 7,8 ஆகியவைகளைப் பார்க்கும் போது, இப்படி நினைத்து ஆபிரகாமின் விசுவாச உறுதியைக் களங்கப் படுத்துவது எவ்விதத்திலும் நியாயமல்லவென்று தானே தெரிகிறது.

" அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி; என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்; என் மகனே, இதோ இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்; இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகன பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம்; என் மகனே, தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்... " (ஆதி. 22:7,8). தயவு செய்து இந்த வரிகளை பலமுறை படித்துப் பாருங்கள். படித்து விட்டு நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். வேறு எந்த மனிதனாகிலும் இப்படிச் சொல்ல முடியுமா? என்று. இந்த இடத்தில், பக்தன் யோபுவைக் கூட ஆபிரகாமோடு ஒப்பிட முடியாது. எப்படியெனில், யோபுவின் சூழ்நிலை வேறு, ஆபிரகாமின் சூழ்நிலை வேறு. இச்சம்பவத்தைப் பொறுத் தளவில் ஆபிரகாமுக்கு இணை ஆபிரகாம் தான். தேவன் மீது அசைக்க முடியாத அபார நம்பிக்கை.

ஆபிரகாமின் நம்பிக்கையை நெருங்கக் கூடிய ஒரு நம்பிக்கையை புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்க முடியும். ஆம், பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் இப்படியாக எழுதியுள்ளார். " ஆகையால், சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கை யாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத்

தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம் " (2 கொரி. 1:8,10) என்றார்.

அன்பானவர்களே, நாம் தேவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கை எப்படிப்பட்டதாக உள்ளது? ஆபிரகாம், பவுல் போன்றோர் கொண்டிருந்த நம்பிக்கை நம்மிடத்தில் காணப்படுகிறதா? அப்படிப்பட்ட நம்பிக்கையுடையவர்களாக பக்தி வாழ்க்கையில் மாற வேண்டுமென்று குறைந்தபட்சம் முயற்சியாவது எடுக்கிறோமா? ஞானி சாலமோன், நீதிமொழிகள் 23:8ல் பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு எழுதியுள்ளதைக் கவனியுங்கள். " நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண் போகாது " என்று. உன் நம்பிக்கை வீண் போகாது என்னும் தேவ வார்த்தைகள் ஆபிரகாம், பவுல் போன்றோரின் வாழ்க்கையில் எக்கச்சக்கமான சூழ்நிலைகளிலும் உண்மையாகத்தானே இருந்துள்ளது. அது ஒருபோதும் வீணாகவில்லை தானே !.

அப்படியானால், நம்முடைய வாழ்க்கையிலும் தேவன் மீதான நம்பிக்கை எப்படிப்பட்ட சவாலை எதிர்கொண்டாலும் அது வீண் போகாது என ஏன் நம்ப மறுக்கிறோம்? நாமும் நம்முடைய வாழ்க்கையில், " நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திக்கிறேன் " என்று தேவனால் சொல்லப்பட வேண்டுமானால், சர்வவல்ல தேவன் மீது முழு நம்பிக்கை வைத்து நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்துகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்த நாம் ஒவ்வொருவரும் இன்றே தீர்மானிப்போம்.

## III ஆபிரகாம் தியாகம் செய்ய விருப்பமுள்ளவனாயிருந்தான் (வ-10)

" இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று தேவன் சொல்லத்தக்க அளவில், ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலியிட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், நாம் தேவனுக்காகத் தியாகம் செய்ய விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பது.


ஆதியாகமம் 22:10-ல் பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான் என்றுள்ளது. இப்படிக் கையை நீட்டி ஆபிரகாம் கத்தியை எடுத்த போது ஆபிரகாமைப் பொறுத்தளவில் அவன் ஈசாக்கை மனதிலே பலியிட்டு தியாகம் செய்து விட்டான். கத்தி அவன் மீது படவில்லை அவ்வளவுதான். மற்றபடி எல்லாம் முடிந்து விட்டது. இங்கே ஈசாக்கை பலியிடக் கர்த்தர் கேட்கும் போது எப்படியெல்லாம் சொன்னார் என்பதைக் கவனியுங்கள். " உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை என்று " (22:2). இங்கே ஆபிரகாம் தன் ஏக சுதனை பலிகொடுத்த செயலில், தேவ சாயலை உங்களால் பார்க்க முடிகிறதா இல்லையா? எப்படியெனில், பரலோகத்தின் தேவனும் தன்னுடைய ஒரே பேறான குமாரனைத் தானே நமக்காகத் தந்தார் என்று வேத வசனங்கள் கூறுகிறது. " தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " (யோவான் 3:16)

இப்படி தியாகம் செய்கிற காரியத்தில் தேவ சாயல் மாத்திரமல்ல கிறிஸ்து இயேசுவின் சிந்தையும் ஆபிரகாமுக்குள்ளாக இருந்தேள்ளது. எப்படியெனில், இயேசு ஆண்டவர் நம்முடைய பாவங்களுக்காகத் தன்னுடைய ஸ்தானத்தையும், இருப்பிடத்தையும் தியாகம் செய்துள்ளார். “ அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் ” . (பிலி. 2:6-7) இயேசுவின் தியாகம் இதோடு நிற்கவில்லை. பவுலடியார், எபேசியருக்கு எழுதும்போது, “ கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கை யாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் ” (எபே. 5:2) என்று கூறியுள்ளார்.

எந்த போதனையும் இல்லாமலே, தேவ சாயலையும், கிறிஸ்துவின் சிந்தையையும் முற்பிதாக்களின் காலத்தில் பெற்று வாழ்ந்துள்ளான். ஆனால், நாமோ கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாக வாழவேண்டுமென்று கட்டளை பெற்றுள்ளோம் (பிலி 2:5). இப்படிப்பட்ட தியாக சிந்தை கொண்டவர்களாக வாழ்ந்து கொண்டுள்ளோமா? ஒவ்வொரு கிறிஸ்தவனும் தியாக சிந்தை கொண்டவனாக வாழ வேண்டுமென்று எதிர்பார்த்துத் தான், தமது ஆவியானவர் மூலமாக பவுலுக்கு இவ்விதம் வெளிப்படுத்தி உள்ளார். “அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான **ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று** தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளு கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை ” (ரோமர் 12:1) என்று. நாம் ஒவ்வொருவரும் தியாக மனப்பான்மை உள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று இதைவிடத் தேவன் எப்படி தெளிவாக வெளிப்படுத்த முடியும்?.

ஒருவேளை, ஆபிரகாமுக்குத் தியாக சிந்தை நம்மைப் போல் இல்லாமல் இருந்திருக்குமானால் “ நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் ” என்று தேவன் சொல்லியிருப்பாரா? நம்மைப் பார்த்தும் தேவன், இவ்விதமாகச் சொல்ல வேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் தியாக சிந்தையுள்ளவர்களாக மாற வேண்டும். அதாவது, ஆன்மீக வாழ்க்கையில், தவறானதாகவும், அசத்தியமாகவும் தெரியும் எல்லா வற்றையும் தூக்கி எறிய வேண்டும். அதனால் ஏற்படும் பாதிப்போ, விளைவோ எதுவாக இருந்தாலும் அதைப் பற்றித் துளியும் கவலைப் படக் கூடாது. ஆபிரகாமைப் போல் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல் (கலா. 1:16) மாற வேண்டும்.

பரலோகத்தின் தேவன், “ நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் ” என்று நம்மைப் பார்த்துச் சொல்லும் நிலையில் நாம் வாழ்ந்தால் தான் பரலோக பாக்கியம் நமக்கு சொந்தமாகும். ஆமென்.



# ஏன் நாங்கள் குரல் இசையை மட்டும் ஆராதனையில் பயன்படுத்துகிறோம்?

**Bro. J.C. சோட்**

கிறிஸ்துவின் சபையாராகிய நாங்கள் மற்ற மார்க்கப்பிரிவினை சபைகளிடமிருந்து வித்தியாசப் படுகிறோம், எங்களுடைய ஆராதனை ஒழுங்கில், வெறுமனே பாடல் மட்டும் தான் உண்டு. அதாவது, நாங்கள் பாடலோடு இசைக்கருவிகளை பயன்படுத்துவது கிடையாது. ஏதோ மற்றவர்களிடமிருந்து நாங்கள் வேறுபட்டி ருக்கிறோம் என்று காட்டுவதற்காக நாங்கள் பயன் படுத்துவதில்லை என்பது கண்டிப்பாக தவறானது. மாறாக, எங்களுடைய ஆராதனை ஒழுங்கில் பாடல் மட்டும் இருப்பதற்குக் காரணம், வேதாகமம் இப்படித்தான் போதிக்கிறது.

இசை இரண்டு வகைப்படும். ஒன்று வாய்வழியான குரல் இசை, மற்றொன்று கருவிகளால் வரும் இசை. குரல் இசை மனித குரல்களின் கலவையால் ஏற்படும் ஒரே மாதிரியான இசை. இது தான் உலகிலேயே மிக அழகான இசை. இவ்வகையான இசை தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது. இது நம் சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதிகளாக ஏறெடுக்கப்படுகிறது. இது ஆவியாலும், ஜீவனாலும் நிறைந்திருக்கிறது. இசைக்கருவிகளைக் கொண்டு உண்டாக்கப்படும் இசை மனிதனால் உண்டாக்கப்பட்ட கருவிகளிலிருந்து வருகிறது. அந்த இசைக்கருவிகள் உயிரற்றவை. அவைகளுக்கு ஆற்றலும் இல்லை. உணர்வுமில்லை. அவைகள் சத்தமிடுவதற்கு ஒரே காரணம், மனிதன் அவைகளை அடிக்கிறான், இழுக்கிறான் அல்லது வாசிக்கிறான். இப்போது கேள்வி இது தான். தேவன் தன்னுடைய படைப்பான மனிதன் தன்னை துதிக்க வேண்டும் என்று விரும்புகிறாரா அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளால் தான் துதிக்கப்படவேண்டும் என விரும்புகிறாரா? அவருக்கு எது அதிக அர்த்தமுள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தாளர் இப்படிச் சொல்கிறார். ஆகையால், "*அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்*" (எபி. 13:15). நம் உதடுகளின் கனிகளால் தேவனைத் துதிக்க வேண்டும் என்று ஆசிரியர் சொல்வதை கவனியுங்கள். நம்முடைய உதடு களின் கனி என்னவாயிருக்கும்? நம் பேச்சு, பாடல், ஜெபங்கள், துதி வார்த்தைகள் போன்றவைகளே. இவைகளெல்லாம் யாருக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்? நிச்சயமாக தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்.

உதடுகளின் கனியால் தேவனைத் துதிக்கிற கருத்தை நாம் தொடர்ந்து பார்க்கும் போது பவுல் இப்படிச் சொல்கிறார், "*சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து* " என்று சொல்கிறார் (எபே. 5:19,20). இங்கே பல்வேறு வகையான பாடல்களினால் ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லுதல் பற்றி பவுல் பேசுகிறதை கவனியுங்கள். அந்தப் பாடல்கள் ஆவிக்குரியவைகளாகவும், வேத வசனத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

மறுபடியும், பவுல் இப்படிச் சொல்கிறார். " *கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து, புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி* " (கொலோ. 3:16). இப்போது பவுல் இங்கே என்ன சொல்கிறார்? கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத்துகிறார், ஆவிக்குரிய வேத வசனத்தின் அடிப்படையிலான பாடல்களினால் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்ல வேண்டும் என்கிறார். இது உண்மையாயிருக்க, இங்கே பவுலின் வாக்கியத்தில் இசைக் கருவிகளைப் பயன்படுத்தலாம் என்று ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதை உங்களால் காணமுடிகிறதா? அப்படி யில்லையென்றால், ஆராதனையில் தேவனைத் துதிக்கும்படியாக இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் போது தேவனுடைய வார்த்தையோடு கூட்டுகிற வேலையைச் செய்வதாக இருக்காதா?

ஆனால், அதில் எந்தத் தவறையும் நாங்கள் காணவில்லை என்று நீங்கள் வாதிடலாம். உங்களைப் போல வேறொருவரும் இதில் எந்தத் தவறும் இல்லையே என்று கூறலாம். இது அப்படியே தொடரலாம். இங்கே கவனிக்க வேண்டியது நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையின் படி நடக்க வேண்டும் என்பதே. அப்படி நாம் நடக்கவில்லையென்றால் ஒன்றைக் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்?

இசைக்கருவிகள் வாசிப்பது உங்களுக்கு பிடித்திருக்கிறது என்று நீங்கள் கூறலாம் அல்லது இசைக்கருவிகளை வாசிக்கும் திறமை பெற்றவர்களின் நிலை என்ன? இசைக்கருவிகளை இசைப்பதன் மூலமாக அவர்கள் கர்த்தரைத் துதிப்பதால் தேவன் கனப்படுத்தப்படமாட்டாரா? இங்கே பிரச்சனை, நான் என்ன விரும்புகிறேன் என்பதல்ல. மாறாக, என்னத்தை தேவன் எதிர்பார்க்கிறார் என்பது தான். ஒருவருக்கு இசைக்கருவிகளை வாசிக்கும் திறமை இருக்கிறதென்பதற்காக அவருக்கு தேவனைத் துதிக்கும்படி இசைக் கருவிகளை வாசிப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டால், வழக்கத்திற்கு மாறான திறமைகளைக் கொண்டுள்ள வேறுபலரை என்ன செய்வது? அந்தத் திறமைகள் எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஏறெடுக்கும்படியாக அவைகளை ஆராதனைக் குள் கொண்டு வரலாம் என்று வாதிடுவோமா? இங்கே நான் சொல்லும் கருத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.

ஆராதனையில் இசையைப் பயன்படுத்துவதற்கு ஆதரவாக செய்யப் படும் முக்கியமான வாதம் தாவீதும் மற்றவர்களும் பழைய ஏற்பாட்டில் அப்படிப் போதித்திருக்கிறார்கள் என்பது. அவர்கள் அப்படிப் போதித்திருக்கிறார் களா? இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். உண்மை என்னவென்றால், கிறிஸ்து சிலுவையில் மரித்து பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டு புதிய பிரமாணத்தைத் தந்துவிட்டபடியால் பழைய பிரமாணம் இப்போது நம்மை கட்டுப்படுத்துவதில்லை. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின என்று வாசிக்கிறோம் (யோவான் 1:17). நியாயப் பிரமாணத்தி லுள்ளதெல்லாம் நிறை வேறுமளவும், நியாயப்பிரமாணம் ஒழிந்து போகாது என்று இயேசு சொன்னார் (மத். 5:17,18). நியாயப் பிரமாணத்தை அகற்றிப் போடும்படி கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அதை நிறைவேற்றினார் (கொலோ. 2:14). காரியம் இப்படி இருக்க, சங்கீதத் தையோ வேறு எந்த பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியையோ ஆராதனை யில் இசைக்கருவியுடன் கூடிய பாடலை நியாயப்படுத்த பயன்படுத்த முடியாது. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் செய்யப்பட்ட அநேக காரியங்களை நிகழ்காலத்தில் நம்மால் செய்ய முடியாது, செய்யக்கூடாது.

வேத வல்லுநர்களும், மாபெரும் மதத்தலைவர்களும் அநேக வருடங் களாக ஒத்துக் கொள்ளுகிற ஒரு காரியம், வேத வாக்கியங்களிலிருந்தோ அல்லது வேறு ஏதாவது நம்பத்தகுந்த ஆதாரங்களிலிருந்தோ முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு எந்த ஒரு குறிப்போ, அடையாளமோ இல்லை என்பது தான்.

எனவே, இந்தத் தலைவர்களில் அநேகர், அவர்கள் வாழ்ந்த காலத்தின் மக்களோ அல்லது இன்றைய நாளில் வாழும் மக்களோ தேவனுக்கான ஆராதனையில் இசைக்கருவிகள் கூடாதென்று முடிவெடுத்தார்கள். உதாரண மாக, கத்தோலிக்க சபை கடைசியாக பிரிந்தது. அப்படிப் பிரிந்ததற்கான காரணங்களில் ஒன்று தேவனை துதிப்பதற்கு பாடல்கள் பாடும்போது இசைக் கருவிகள் பயன்படுத்தப்படலாமா? வேண்டாமா? என்பது. இசைக் கருவி களின் துணையோடு பாடல் வேண்டும் என்றுணர்ந்த கூட்டம் ரோமன் கத்தோலிக்க சபை என்று அழைக்கப்பட்டது, இன்றும் இவர்கள் இசைக் கருவி களைப் பயன்படுத்துகிறார்கள். இசைக்கு எதிர்ப்பு தெரிவித்த மற்று மொரு கூட்டம் கிரேக்க ஆர்த்தோடெக்ஸ் சபை என்றழைக்கப்பட்டது, இன்றளவும் அவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதில்லை. பின்பு, சீர்திருத்த மற்றும் புரோட்டஸ்டண்ட் இயக்கங்களைச் சேர்ந்த மார்ட்டின் லூதர், ஜான் வெஸ்லி போன்றோர் தேவனுடைய பரிசுத்த வார்த்தையில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி ஆராதனைக்காக தேவனுடைய தெய்வீகத் திட்டத்திற்கு எதிராக இதுபோன்ற இசைக்கருவிகள் சேர்ப்பதை வெளிப் படையாக எதிர்த்தார்கள்.

தேவனுடைய வார்த்தைக்கு நாம் திரும்பும் போது, நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனப் பகுதிகள் இருக்கின்றன. கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்பட்ட பிறகு கர்த்தரையும், சீஷர்களையும் பற்றி சொல்லப்பட்டிருக்கிற வாக்கியத்திலிருந்து நாம் இங்கே ஆரம்பிப்போம். " *அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப்பாடின பின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்* " (மத். 26:30). பவுலும், சீலாவும் கர்த்தருடைய வேலையைச் செய்ததற்காக அடிக்கப் பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, அவர்களுடைய கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்த நிலையில், வேத வசனம் இப்படிச் சொல்கிறது. " *நடுராத்திரி யிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்* " (அப். 16:25). பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார். " *என்னத் தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவி யோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்* " (I கொரி. 14:14,15).

எனவே, பாடுகிற காரியமாக இருந்தாலும் சரி, தேவனை நாம் ஆராதிக்கும் போது இசைக்கருவிகளை பயன்படுத்திப்பாடும் பாடலானலும் சரி, அது அதிகாரம் சம்மந்தப்பட்ட ஒன்றாக இருக்கிறது. வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசி, வேதாகமம் எங்கே அமைதியாக இருக்கிறதோ அங்கே நாம் அமைதியாக இருப்போமோ அல்லது தேவன் என்ன சொல்லியிருந்தாலும் பரவாயில்லை, நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய முன் வருவோமா? வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்கு இருக்கிறது என்று வேதாகமம் பேசியிருக்கிறபடியால், கிறிஸ்து எல்லாவற்றைக் குறித்தும் பேசியிருக்கிறார். ஆகவே, நாம் அவரையும், அவருடைய வார்த்தையையும் மதித்து, அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு அப்பால் போகக்கூடாது. ஆகையால், ஆராதனையில் நம்முடைய இசையை வெறும் வாய் ரீதியான பாடலோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்போது மட்டும் தான், தேவன் நம்முடைய காரியங்களில் பிரியப்படுவார் என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்.

நீங்கள் தேவனை எப்படி ஆராதிக்கிறீர்கள்? ஆராதனை மிகவும் முக்கியம் என்பது உங்களுக்கு தெரியும். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படி இல்லையென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). அதன் பின்பு, " *இரட்சிக் கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் என்று வாசிக்கிறோம்* " (அப். 2:47). இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, ஒரு கிறிஸ்தவனாக, கர்த்தருடைய சபை யின் அங்கத்தினராக, நீங்கள் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க முடியும் (யோவான் 4:24). ✤

பெண்கள் பகுதி

# முதிர் வயதை நோக்கி வளர்வது

Sis. RACHEAL NAYAGAM

இந்த தலைப்புக்குள் செல்லுவதற்கு முன்பாக மிகவும் மகிழ்ச்சியான ஒரு வேத பகுதியைப் பார்ப்போம்.

" நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும் என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர் வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள் " (சங். 92:12 - 15).

செழித்து, வளருவான், நாட்டப்பட்டு, கனிதந்து, புஷ்டியாய், பசுமையாயிருப்பார்கள் போன்ற இந்த வார்த்தைகள் எல்லாம் நமக்கு உற்சாக மளிக்கக் கூடியதாய் இருக்கிறது. எப்படி, மக்கள் தங்கள் வயதான காலத்தை அல்லது முதிர்வயதை சமாதானமுள்ளதாக அமைதியாக மாற்றிக் கொள்ள முடியும் என்பது பற்றி பார்ப்போம்.

ஆபிரகாம், சாராள் ஆகிய இருவரின் வாழ்க்கையைப் பற்றி வேதாகமத்தில் மிகவும் மதிப்பாக நமக்கு சில பக்கங்களில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது, அவர்கள் இருவருக்கும் திருமணமானபோது எந்த வயதில் இருந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், தேவன் அவர்களை ஊர் என்ற கல்தேயர் பட்டணத்திலிருந்து அழைத்து, கானான் தேசத்துக்கு போன நாள் பரியந்தமும் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வு எப்படி துளிர்த்து பூவாய் மலர்ந்தது என்பது பற்றி வேதத்தில் வாசிக்கிறோம். ஆரானிலே இருந்து கானான் வாழ்க்கை, பின்பு எகிப்திலே அந்நியரும், பரதேசிகளுமாய் இருந்த கொஞ்ச காலம் பற்றி நமக்கு தெரியும். பின்பு, அவர்கள் வயது சென்றவர்களானார்கள். மிகுந்த அமைதியாக, சமாதானத்தோடு முதிர் வயதை அடைந்தார்கள். தேவன் மீது வைத்திருந்த அன்பும், அவர்கள் ஒருவருக்கொருவர் வைத்திருந்த அன்பும், மிகவும் ஆழமாக வளர்ந்து கொண்டே சென்றது. அவர்களுடைய விசுவாசமும் முதிர்ச்சி அடைந்து பழுத்த நிலைக்குச் சென்று விட்டது. அசைக்க முடியாத விசுவாசத்தோடு இவர்கள் இருவரும் மரணத்தை சந்தித்தார்கள் என்று வேதத்திலே வாசிக்கிறோம்.

இவர்க ளெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொண்டு பூமி யின் மேல் தங்களை அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள் (எபி. 11:13). ஆபிரகாமும், சாராளும் விக்கிரக வணக்கம் நிறைந்த காலத்திலே வாழ்ந்தார்கள். தீமை அவர்களைச் சுற்றிலும் இருந்த காலம் அது. ஆனாலும், ஒரு வெற்றி யுள்ள வாழ்க்கையையே இவர்கள் வாழ்ந்தார்கள்.

முதிர் வயதை நோக்கி பலராகிய நாம் சென்று கொண்டுள் ளோம். அன்பு, பாசம், நம்பிக்கை, அர்ப்பணிப்பு, விசுவாசம் இவை களில் நாம் வளர வேண்டும். முதிர் வயதாகும் போது சிலர் கடு, கடு என்றும், வெறுப்போடும் நடந்து கொள்வார்கள், சிலர் மிகவும் பரிசுத்த மாக தங்களைக் காத்துக் கொள் வார்கள். சிலருடைய அந்திய காலம் இளமை கால நாட்களை விட மிகவும் அழகுள்ளதாக காணப்படும். வீட்டிலும், தேவனுக்கு பணிபுரிவ திலும், சமுதாயத்திற்கும் பயனுள்ள வகையில் எப்படி முதியவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பார்க்கலாம்.

1. விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து வளர வேண்டும்.
2. நம்பிக்கையில் வளர்ந்தேற வேண்டும்.
3. அன்பில் வளர்ந்து முதிர்ச்சி பெற வேண்டும்.
4. பொறுமையில் வளர வேண்டும்.
5. நன்றியாய் இருப்பதில் வளர்ந்து முதிர்ச்சி அடைய வேண்டும்.
6. ஞானத்தில் வளர வேண்டும்.
7. சேவை செய்வதில் வளர்ந்து தேற வேண்டும்.
8. மகிழ்ச்சியாய் இருப்பதில் வளர்ந் தேற வேண்டும்.
9. போதுமென்ற மனது, அதாவது திருப்தி அடைவதில் வளர்ந்து செல்ல வேண்டும்.
10. பிறருக்கு உதவி செய்வதில் வளர்ச்சி அடைய வேண்டும்.
11. தேவனுக்குள் வளர்வதில் முதிர்ச்சியடைய வேண்டும்.

முதுமையை எட்டப் போகும் நாம் மேற்கண்ட காரியங்களில் நம்மை வளர்த்துக் கொள்ள வேண் டும். கடைசியாகப் பார்த்த, தேவ னுக்குள் வளர்ந்து முதிர் வயதை யடைய வேண்டும் என்பதில் வேதாகமத்தில் அப்படி வாழ்ந்த ஓரிரு முதியவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஆதியாகமத்தின் ஆசிரியர் கூறும் போது, பிற்பாடு " *ஆபிரகாம் நல்ல நரை வயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து தன் ஜனத்தாரோடே சேர்க் கப்பட்டான்* " (ஆதி. 25:8). என்று வாசிக்கிறோம். ஈசாக்கைப் பற்றிக் கூறுகையில் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க் கப்பட்டான். அவன் குமாரராகிய ஏசாவும், யாக்கோபும் அவனை அடக்கம் பண்ணினார்கள். ஆதி. 35:29. தாவீது இராஜாவைப் பற்றி பார்க்கும் போது, அவன் தீர்க்கா யுசும், ஐசுவரியமும், மகிமையு முள்ளவனாய் நல்ல முதிர் வயதிலே மரணமடைந்த பின், அவன் குமார னாகிய சாலமோன் அவன் ஸ்தானத் திலே அரசாண்டான் (1 நாளா 29:28). பழைய ஏற்பாட்டிலே வாழ்ந்த இந்த மூவரும் நல்ல முதிர் வயதிலே நீண்ட காலம் வாழ்ந்தவர் களாய் மரித்தார்கள். காரணம் தேவ னுக்காக வாழவேண்டும் என்று முடிவு பண்ணி வாழ்ந்தார்கள். அவர்கள் பூரண புருஷர்களல்ல, ஆனால், பூரணராகும்படியான முயற்சியோடு வாழ்ந்தார்கள்.

முதிர் வயதை அடையப் போகும் நாம் வயதில் மட்டும் முதிர்ச்சியடையாமல் தேவனுக்கும், சமுதாயத்திற்கும் சேவை செய்வதில்

முதிர்ச்சியடைய வேண்டும். வேலை செய்வதிலும், தேவனுக்கு ஆராதனை செய்வதிலும் முதிர்ச்சியடைய வேண்டும். பிறரை தேவனிடத்தில் அழைத்து வருவதில் முதிர்ச்சி தேவை. பரிசுத்தத்திலும், நம்பிக்கையிலும் முதிர்ச்சி அவசியம். சத்தியத்திலும், ஆவிக்குரிய காரியங்களிலும் முதிர்ச்சியடைய வேண்டும்.

தேவனுக்குள் நாம் மரிக்க வேண்டுமானால் தேவனுக்குள் வாழ்ந்து முதுமையை எய்த வேண்டும். தேவனுக்குள் வாழ்வதென்றால், இளமைக் காலந்தொட்டே தேவனுக்குள் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

தேவனுக்குள் வாழ்ந்து முதிர்ச்சியடைந்த ஸ்திரீகளில் அன்னாள் (லூக். 2:36-38) மிகவும் பாராட்டுக்குரியவர். பிரியமான வைத்தியனாகிய லூக்கா ஆசிரியர் இந்த ஸ்திரீயைப் பற்றி கூறுகையில், " *ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள். அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்* " என்கிறார். *ஏறக்குறைய 84 வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று கர்த்தரை புகழ்ந்து எருசலேமிலே மீட்புண்டாக்க காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்து பேசினாள்.*

மூன்று வசனங்களில் இவள் பேசப்பட்டிருந்தாலும் தன் முதிர் வயதிலேயும் தேவனுக்காகக் காத்திருந்து வாழ்ந்ததினால் இவளை பரிசுத்த ஆவியானவர் மறக்காமல் இவளை நினைத்து எழுதி வைத்துள்ளார்.

யோவானின் தாய், தகப்பனும் அப்படித்தான் அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும், நியமங்களின்படியேயும், குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:6). அடுத்த வசனத்திலே பார்க்கும் போது, இருவரும் வயது சென்றவர்களாயுமிருந்தார்கள் (1:7) என்று பார்க்கிறோம். எவ்வளவு காலம் வாழ்ந்து மரித்தார்கள் என்று நமக்கு தெரியாது. ஆனால், அவ்வளவு காலமும் தேவனுக்குள் வாழ்ந்து முதுமையைக் கழித்துள்ளார்கள். கிறிஸ்துவுக்காக கணவனும், மனைவியும் வாழ்ந்து முதிர்ச்சியடையும் போது அது எவ்வளவு ஒரு பாக்கியமான நிலையாய் இருக்கிறது! அர்த்தமுள்ள வாழ்க்கையாய் அது இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இதை வாசித்த பிறகு நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தர் கொடுத்த இந்த பூமிக்குரிய வாழ்க்கையை வீணாகக் கழிக்காமல் கர்த்தருக்குள் வாழ்ந்து மரிக்க பிரயாசை எடுப்போம். வெறுமனே வயதிலே முதிர்ச்சியடையாமல், நம் முதிர்ச்சி ஆவிக்குரிய வகையிலும் இருக்கும் படியாகப் பார்த்துக் கொள்வோம்.

வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கும், முதியவர்களைப் பற்றி பார்த்தோம். நாமும் அவ்வாறு வாழ முயற்சி எடுப்போம். அது நமக்கும், நாம் சார்ந்துள்ள கிறிஸ்துவின் சபைக்கும், நம் குடும்பத்தாருக்கும், பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதமாக இருக்கும். ஆமென்! ✤

வாலிபர் பகுதி

# பாவத்தின் பக்க விளைவுகள்

Bro. பென்னி மார்ட்டின்

வாலிபக் கண்மணிகளுக்கு நசரேயனாகிய இயேசுவின் நல் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக காண்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இப்பாழாய்ப் போன பாரில் பரிதபித்துக் கொண்டிருக்கிறோம். நாம் விரும்பாவிட்டாலும் திரும்பிய பக்கம் எல்லாம் பாவம். கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடமற்றவர் களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (பிலிப். 2:15). பாவம் செய்யப் பழகிப்போன இவ்வுலகத்து மக்களின் ஆத்தும நிலையை எண்ணிப்பார்த்தால் நமக்குப் பாவமாக இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நம் பிதாவாகிய தேவன் பாவத்தைப் பார்க்கக்கூடாதவராயிருக்கிறார், அதனால், அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பாவத்தைப் பார்தது அருவெறுக்கிறோம். அது மட்டுமல்ல, இப்படி பாவச் செயல்களில் ஈடுபடுபவர்களிடம் நாம் போய் இதை விட்டு நீங்கள் மனந்திரும்புங்கள், பாவம் உங்களை பதம் பார்த்துவிடும், நீங்கள் பாவத்திற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்று சொல்லும்போதெல்லாம் அவர்கள் நம்மீது வீசும் பார்வையும், நமக்கெதிராக தொடுக்கும் வார்த்தைக் கணைகளும், நமக்குள் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி நம்மை நிலைகுலையச் செய்து, நம்மை தலை குனியச் செய்கிறது. அதுவும் போதாதென்று, அவர்களுடைய ஆத்துமாக்களை அதல பாதாளத் திற்கு அழைத்துச் செல்கின்ற காரியம் என்னவென்றால், பாவத்திற்குப் பின் விளைவுகள் அல்லது பக்க விளைவுகள் எதுவுமில்லை என்கிற மெத்தனப் போக்குதான். பிரியமான வாலிபர்களே, வேத வசனம் "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடைவோம்" என்று எச்சரிப்பு விடுக்கிறது (2 கொரி. 5:10). பாவத்தின் பக்க விளைவுகளைப் பற்றிய பறவைப் பார்வை இதோ;

## I. உலகளாவிய விளைவுகள் :

அண்ட சராசரங்களை உருவாக்கின நம் தேவன் மனிதன் வாழும் படியாக மாசற்ற, தூய்மையான ஒன்றாக இப்பூமியை உண்டாக்கினார். ஆனால், மனித இனத்தின் பாவத்தின் விளைவாக நோவாவின் நாட்களில் தேவன் இப்பூமியில் மிகப்பெரிய ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணினார். அப்போது மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது (ஆதி. 7:11). அந்நாட்களிலேயே இப்பூமி உருக் குலைந்தது, பூமியின் தட்பவெட்ப மண்டலங்கள் தடம் புரண்டன,

இப்பூமிக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் இன்று நாம் எதிர்கொள்ளும் புயல், சூறாவளி போன்றவைகளுக்கு வழிவகுத்தன. பூமிக்கு அடியில் உள்ள தட்டுகள் நிலைமாறியபடியால் இன்று பூகம்பங்கள் ஏற்படுகின்றது சுருக்கமாக சொல்லப்போனால் இன்று ஏற்படும் இயற்கை சீற்றங்களுக்கெல்லாம் ஆதியாகமம் 6,8 அதிகாரங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் தான் வித்திட்டன. இதற்கு ஏராளனமான, தாராளமான புவியியல் மற்றும் தொல்பொருள் ஆதாரங்கள் உள்ளன. தேவன் இவ்வுலகை உண்டாக்கினார் என்பதை சந்தேகப்படும் சந்தேகப்பேர்வழிகள் கூட ஆரம்ப நாட்களில் இப்பூமி மிதமான, ஒரே மாதிரியான, சமச்சீரான தட்பவெட்ப நிலையை கொண்டிருந்ததை தாவர மற்றும் மிருகங்களின் படிமாங்களைக் கொண்டு உறுதி செய்கின்றனர். பழங்கால நாகரீகங்களை ஆராய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அக்காலத்து உலகம் மாசற்ற, நோயற்ற ஒன்றாக இருந்ததை கண்டறிந்திருக்கின்றனர். எனவே, பாவம் ஆரம்பத்திலிருந்தே மனித இனத்திற்கு சாபத்தையும், ரோகத்தையும் கொண்டு வந்திருக்கிறதை கண்டறிந்துவிட்டீர்களா?

## II சரீரப்பிரகாரமான விளைவுகள் :

மனித இனத்துக்கு மரணமும், அதற்கு முந்தைய பிரச்சனைகளும், உபாதைகளும், சிருஷ்டிகருக்கு அது கீழ்ப்படியாமல் போனதினால் உருவான விளைவுகள் தான். ஆதியில் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய கட்டளையை மீறியதால் பாவம் செய்தான். அதன் விளைவாகத்தான் மனிதனுக்கு மரணம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அது ஆவிக்குரிய மரணமாக இருந்தாலும், பல கட்டங்களை உடல் கடந்து இறுதியில் சரீர மரணத்தைக் கண்டது. தேவனிடத்திலிருந்து மனிதன் பிரிவதை ஆவிக்குரிய மரணமென்றும், உடலில் இருந்து ஆவி பிரிந்து போவதை சரீர மரணம் என்றும் அழைக்கிறோம்.

இன்று மனித இனம் வியாதியினால் வியாகுப்படுவதற்கான காரணமே மனிதன் ஆரம்பத்தில் தேவனுக்கு விரோதமாக செய்த கலகம் தான் (ரோமர் 5:18). அதனால், நம் சத்துருவாகிய மரணம் நம்மை மேற்கொண்டது. அது முதல் நம்முடைய பிறப்பிலிருந்தே மரணம் நம்மை நிழல் போல் தொடர்ந்து வருகிறது. சிலரை அது முன்பாகத்தாக்குகிறது, சிலரை அது சற்று சாகவசமாகத் தாக்குகிறது. ஏனென்றால், அது மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி. 9:27). பாவம் தொன்றுதொட்டு மனித இனத்தை எவ்விதமாகப் பதம் பார்க்கிறதென்று பார்க்கிறீர்களா? இன்றும் அதன் தாக்கம் தீர வில்லை, பிசாசானவன் ஆதியிலிருந்து கொலை பாதகனாயிருந்து எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திருகிறிபடியால் நாம் விழித்திருந்து ஆவியையும், ஆத்துமாவையும் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பெரும்பாலான சரீர உபாதைகளுக்கு காரணம் நம்முடைய தீய பழக்கவழக்கங்கள், துக்கம், பொறாமை, பகை உணர்வு போன்றவைகள் என்றறிந்து அவைகளை நம்மை விட்டு முற்றும் அகற்ற வேண்டும்.

## II ஆவிக்குரிய விளைவுகள் :

நாம் செய்யும் பாவங்களுக்கு நாம் கொடுக்கும் அதிகப்படியான விலை ஆவிக்குரிய மரணத்தை சந்திப்பது தான். இதைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாகச் சொல்கிறார். " இதோ, இரட்சிக்கப்படாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது " (ஏசாயா 59:1,2).

பிரியமான வாலிபர்களே, பெரும்பாலான வர்கள் பாவத்தினால் ஏற்படும் சரீரப்பிரகாரமான விளைவுகளைப் பற்றி பயப் படுகிறார்கள், பயந்து பாவத்தைக் களைய முற்படுகிறார்கள். ஆனால், ஆவிக்குரிய மரணத்தைப் பற்றிய அறிவோ, அக்கறையோ, அறவே இல்லை. நம் உடலில் இருந்து ஆவி பிரிந்து போவதை எப்படி சரீர மரணமென்று அழைக்கிறோமோ, அதேபோல், தேவனிடத்திலிருந்து நம் உறவைப் பிரித்துக் கொள்ளும்போது, முறித்துக் கொள்ளும்போது அதை ஆவிக்குரிய மரணம் என்று அழைக்கிறோம். இவ்வுலகத்தை உண்டாக்கி, நம் பாவங்களுக்குப் பரிகாரியாக தம்முடைய ஒரே பேறான குமாரனையே அனுப்பிக் கொடுத்த தேவனோடு ஆவிக்குரிய உறவை நாம் முறித்துக் கொண்டால் அதன் விளைவை நம்மால் தாங்க முடியாது. தேவனற்ற ஒரு வாழ்க்கையை நம்மால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. இவ்வுலகில் கோடிக் கணக்கான மக்கள் மெய் தேவ னாகிய நம் தேவனை தொழுது கொள்ள மறுத்து, அவருடைய வார்த்தை களுக்குக் கீழ்ப்படிவதை வெறுத்து, தங்கள் வாழ்க்கையில் ஒரு வெற்றிடத்தை அவர்களாகவே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல் சபையிலும் பலர் பாவத்தின் கோரத்தன்மையை உணராதவர்களாக தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து, தேவ கோபாக்கினையை தங்கள் மேல் குவித்துக் கொண்டிருக்குகிறார்கள். இயேசு கிறிஸ்து " அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் ". என்று நியாயத்தீர்ப்பு நாளிலே சொல்லாத படிக்கு, தேவனோடு கொண்டிருக்கும் உறவில் விரிசல் ஏற்படாதபடி அவர்கள ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் (மத். 7:23).

பிரியமான வாலிப உள்ளங்களே! பாவம் ஒரு மோசமான, கொடூரமான எஜமான், அது ஒருவரிடமிருந்து எல்லாவற்றையும் கொள்ளையடித்து, அவருக்கு எந்த நன்மையையும் கொடாமல் விட்டுச் செல்கிறது. இந்த பாவந்தான் நம்மையும் தேவனையும் இவ்வுலகிலும், நித்தியத்திலும் பிரிக்கிறது. தேவனையும், நம்மையும் பிரிக்கின்ற அந்த பாவம் நமக்கு தேவை தானா? பாவமற்ற வாழ்க்கையை நாம் இவ்வுலகில் வாழும் போது பாழாய்ப் போன இப்பாரிலிருந்து பரலோகத்தின் தேவன் நம்மை விடுவித்து மரணமில்லாத, துக்கமில்லாத, அலறுதலில்லாத, வருத்தமில்லாத " பரலோகத்திற்கு கொண்டு செல்வார் ". அதற்கு நாம் ஆயத்தமாவோமாக!. ♣

சிறுவர் பகுதி

# புல்லைத்தின்ற ராஜா!

Bro. Dr. ABEL R. NAYAGAM

எனதருமை சிறுபிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களோடு கூட சேர்ந்து தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இப்பகுதியில் வெளிவரும் காரியங்கள் உங்களுக்கு உபயோகமாயிருக்குமென்று நான் நம்புகிறேன். இந்த மாதம், தன்னுடைய பெருமையினால் தேவனிடத்திலிருந்து வித்தியாசமான முறையில் தண்டனையை பெற்ற ஒரு ராஜா பற்றிப் பார்க்கப் போகிறோம். சரி, கதைக்குள் போகலாமா?

நம்முடைய வேதாகமம், அநேக சுவாரசியமான நிகழ்ச்சிகளையும், அதே சமயம் அநேக சுவாரசியமான அறிவியல் தகவல்களையும் நமக்குத் தருகிறது. சில சமயங்களில் இவை இரண்டும் இணைந்த சில சம்பவங்களையும் நமக்குக் கூறுகிறது. அப்படி ஒரு கதையைத் தான் நாம் பார்க்கவிருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் தானியேல் புத்தகத்தில், நேபுகாத்நேச்சார் என்ற மனிதனை நாம் பார்க்க முடியும். அவன் பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தின் ராஜாவாக இருந்தான். அவனைப் பற்றி கூறும் பொழுது, அவன் செல்வமும், பெலமும் நிறைந்த ராஜா என்று வேதம் கூறுகிறது. மேலும், அவனுக்கு ஒரு அழகான அரண்மனை இருந்தது. அவன் புதுப் புதுபட்டணங்களை பெரியதாக கட்டினான். ஆனால், அவனோ தேவனுக்கு மகிமை செலுத்தவில்லை. இப்படியே தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு, அவனுக்கு ஒரு கனவு வந்தது. அது அவனை தொந்தரவு செய்து கொண்டே இருந்தது. அது என்ன கனவு என்பதை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எனவே, ராஜா தானியேல் என்ற இளைஞனை அழைத்து வரச் சொன்னான். தானியேல் தேவனுக்கு பயப்படுபவன் என்றும் மூன்று வேளை தேவனை நோக்கி ஜெபிப்பதும் ராஜாவுக்கு தெரிந்திருந்தது. எனவே, தானியேலால் அந்த கனவை விளக்கி கூற முடியும் என நினைத்தார். எனவே தான் தானியேலை அழைத்தான்.

பின்பு ராஜா தானியேலிடம் தான் கண்ட கனவை கூறினார். அதைக் கேட்ட தானியேல் சோர்ந்து போனான். நாம் அதன் அர்தத்தை கூறினால் ராஜா மிகவும் வருந்துவார், அதை விரும்பமாட்டார் என்று அவன் தனக்குள்ளே சிந்தித்தான். இருந்தாலும் உண்மையைக் கூற வேண்டும் என்று நினைத்து ராஜாவிடம் அந்த கனவின் அர்த்தத்தை கூறினான்.

என்ன கூறினான் என்று அறிய ஆசையாக உள்ளது தானே? ம்... தொடர்ந்து படியுங்கள். ராஜாவே,

நீர் தேவனுக்கு மகிமையும், நன்றியும் செலுத்தாது தவறு என்றும் தேவன் ராஜாவாகிய உம்மை அரண்மனையிலிருந்து தள்ளி விடுவார் என்றும் கூறினான். ஆனால், இன்னும் கடினமாக, நீர் வெளியின் புல்லை மாடுகளைப் போல் மேயும்படி தேவன் செய்வார். நீர் தேவனுக்கு நன்றியையும், மகிமையையும் செலுத்துவதை அறியும்வரை அப்படி ஆகும் என்று ராஜாவிடம் கூறினான் தானியேல்.

உண்மையாகவே, தானியேல் சொன்னது நிறைவேறியது. பாபிலோனின் ராஜா தன் அரண்மனையை விட்டு, வெளியிலே மாடுகளை போல புல்லை தின்றான் என்று வேதம் கூறுகிறது. தானி. 4:33ல் “ அவனுடைய தலை மயிர் கழுகுகளுடைய இறகுகளைப் போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப் போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது” என்று கூறுகிறது.

சரி, நான் முன்னே ஒரு நிகழ்வையும், அது சம்பந்தமான அறிவியல் தகவல்களையும் சேர்த்து ஒரு சம்பவத்தைப் பார்க்கப் போகிறோம் என்று சொன்னேன். அப்படித் தானே? சரி, எப்படி? வேதத்தை நம்பாத சிலர் இந்த சம்பவம் நடந்திருக்க முடியாது என்று கூறுகிறார்கள். ஆனால், இன்றைய நாட்களின் மருத்துவத்திலும் ராஜாவுக்கு வந்தது போன்ற நோய் உள்ளது. அதன் பெயர் (போன்த்ரோபி) அது இன்றும் இருக்கிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் நேபுகாத்நேச்சரைப் போலவே செய்வார்களாம்.



சரி, வேதம் இதன் மூலம் நமக்கு என்ன உணர்த்துகிறது? தொடர்ந்து படியுங்கள். தேவன் தனக்கு மகிமை தராத ராஜாவை இந்த நோயினால் தண்டித்தார். இதற்குப் பின் அவன் திருந்தினானா? ஆம், (தானி. 4:34,37) அவன் தன் வழிகளை மாற்றினான் என்று பார்க்கிறோம். பின்னர் குணமாக்கப்பட்டு மறுபடியும் அரண்மனைக்கு சென்று ராஜாவாக ஆட்சி செய்தான்.

இந்த சம்பவமானது, எப்படி நம்ப முடியாத ஒரு காரியம் உண்மையாக இருக்கும் என்பதற்கு சிறந்த உதாரணம். அறிவியல் சம்பந்தமான விஷயங்களை வேதம் சிலசமயம் கூறும்பொழுது அதை நாம் கண்டிப்பாக சரி என்று நம்ப வேண்டும். ஏனென்றால், *தேவன் பொய்யுரையாதவர்.* என்ன பிள்ளைகளே! நீங்களும் உங்கள் வாழ்க்கையில் தேவனை மறந்து தண்டனை பெற போகிறீர்களா? வேண்டாம். நீங்கள எல்லா விஷயத்திலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் சரியா? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார். ♣

**விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாகவும், கர்த்தருக்குப் பிரியமான வழிகளிலும் செலவழியுங்கள்.**

# “ குணாதிசயம் ” (CHARACTER)

Bro. V. தானியேல் துரைராஜன்

நல்ல குணநலமில்லாத மனிதன் எவ்வளவு பெரிய தலைவராக, அறிஞனாக இருந்தாலும் அது அவனுக்கு சடிதியில் சரிவைக் கொண்டு வரும்.

ஒரு தேள் இருந்தது அதற்கு நீந்தத் தெரியாது. ஒரு முறை ஆமையிடம் “ ஏ’ ஆமையே தயவு செய்து என்னை உன் முதுகில் ஏற்றிச் சென்று, ஆற்றின் அக்கரையிலே விட்டுவிடு” என்று கெஞ்சியது.

அதற்கு ஆமை நீ என்ன முட்டாளா? என்று வியப்புடன் கேட்டது. நீ உன்னை நான் என் முதுகில் சுமந்து நீந்தும் பொழுது, நீ கொட்டி விடுவாய், நான் மூழ்கி இறந்துவிடுவேன் என்றது. அதற்கு தேள் எனதருமை ஆமையே! தேள் ஒரு மாதிரி சிரித்துக் கொண்டே சொன்னது. நான் உன்னைக் கொட்டினால் நீயும் மூழ்கி விடுவாய், நானும் உன்னோடு சேர்ந்து மூழ்கி போய் விடுவேன்! ஆகவே, எப்படி உன்னை நான் கொட்டுவேன்? நீ சொல்லுவதில் எந்த அர்த்தமும் இல்லையே என்றது. சரியாக சொன்னாய் என்றது ஆமை. சரி! என் முதுகில் ஏறிக்கொள் என்று தேளை தம் முதுகில் ஏற்றிக் கொண்டு ஆற்றைக் கடக்க நீந்தியது. பாதி ஆற்றைக் கடந்தவுடன் தேள் பயங்கரமாக ஒரு கொட்டு கொட்டியது. ஆமைக்கு விஷம் ஏறி இருவரும் ஆற்றில் மூழ்கி ஆற்றினடியில் போனார்கள். ஆமை பாதி மயக்கத்தோடு கேட்டது, உன்னை கடிப்பதில் அர்த்தமேயில்லை என்று என்னவோ நல்லவன் மாதிரி சொன்னாயே இப்ப என்னவாயிற்று! ஏன் என்னைக் கடித்தாய் என்று கேட்டது.

அதற்கு “ தேள்” என்ன செய்வது, மூழ்கிக் கொண்டிருந்த அந்த தேள் கவலையோடு சொன்னது. “ இது தான் என்னுடைய குணாதிசயம் ” (It is my character). ஆம், உன்னுடைய குணாதிசயமே உன்னை மற்றவர்களிடத்தி லிருந்து வேறுபடுத்திக் காட்டும். உன் குணாதிசயமே உன்னுடைய வாழ்க்கையின் மகுடம். உன் வாழ்வின் மகிமை; உன் சிந்தையின் உறுதிப்பாடு. உன் குணாதிசயம் உன் நீண்ட கால பழக்க வழக்கத்தின் தொடர்ச்சி.

நாம் தேவனுக்கு என்ன செய்கிறோம் என்பது கணக்கில் வராது. மாறாக, நாம் தேவனுக்கு முன்பாக எப்படிப்பட்டவர்கள் என்பது தான் கணக்கிடப்படும். வேதாகமத்தில் பர்னபாவைப் பற்றி சொல்லும் போது, “ அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் ” (அப். 11:24). நாம் வாழும் சூழ்நிலைகளின் மத்தியில் நம்முடைய மதிப்பு தீர்மானிக்கப் படுகிறது. ஆனால், நாம் விசுவாசிக்கும் சத்தியமே (Truth) நம்முடைய குணாதிசயத்தை நிர்மாணிக்கின்றது.

## I. மதிப்பீடும், குணாதிசயமும் (Reputation Vs Character)

மதிப்பீடு என்பது, நாம் இப்படி இருக்க வேண்டுமென்பது. ஆனால், குணாதிசயம் என்பது நாம் இப்படித்தானிருக்கிறோம் என்பது. மதிப்பீடு (Reputation) என்பது ஒரு புகைப்படம் (Photography). ஆனால், குணாதிசயம் என்பது நம்முடைய நிஜ முகம். பிறர் மதிப்பீடு என்பதை நீ ஒரு கணத்தில் சம்பாதித்து விட முடியும். ஆனால், குணாதிசயத்தை நீ உன் வாழ்நாள் முழுவதும் சேர்ந்து சம்பாதிக்கக்கூடிய ஒன்று, நம்மைப் பற்றிய மதிப்பீடு என்பது நம்முடைய கல்லறைக்குப் பின்னால் மனிதர்கள் என்ன சொல்லுகிறார்களோ அது. ஆனால், குணாதிசயம் என்பது தேவ தூதர்கள் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக நம்மைப் பற்றி என்ன சொல்லுகிறார்களோ அதுவாகும்.

## II. குணாதிசயமும், நேர்மையும் (Character and Integrity)

இந்த உத்தமம், நாம் தேவனுடைய ஒளியில் நடப்பதால் நாம் பெறும் ஓர் உன்னத குணாதிசயம். இது அநேகமாயிரம் பொன், வெள்ளியைப் பார்க்கிலும் விலையேறப் பெற்ற ஒன்று. இது நேர்மை அல்லது உத்தமம் ஆகும். யோபு, உபத்திரவங்களின் மத்தியிலும், சோர்வுகளின் மத்தியிலும், தன் உத்தமத்தை விடாமல் இருந்தார்.

ஒரு நல்ல மனுஷனுடைய குணாதிசயம் அவனுடைய நடைமுறையில் தான் சோதிக்கப்படும். குறுகலான வழியில் நடக்கின்ற யாவரும், தப்பான வழியில் போகமாட்டார்கள்.

நம்முடைய மூளையில் நாம் எதை எடுத்துக் கொள்கிறோமோ அதுவே நம்முடைய குணாதிசயத்தை நிர்ணயிக்கிறது. நாம் எப்பொழுதும் ஒரு குப்பைக் கூடையாக (Waste Paper Basket) இருக்கக்கூடாது. மனிதர்கள் யாவரும் அவர்களுக்கு என்ன சம்பவித்தாலும், அதையும் விட மேலானவர்கள்.

குணாதிசயம் எப்படி வளருகிறது என்றால், மனிதனுடைய விசுவாசம், மனிதனுடைய சிந்தை, மனிதனுடைய விருப்பம், மனிதனுடைய நோக்கம், செயல்பாடுகள் இவைகளால் தான். நம்முடைய காரண காரியங்களை நம்முடைய நடவடிக்கைகளுக்கு (behaviour) சாக்குப் போக்குச் சொல்ல முடியாது.

## III. தெரிவு செய்தலும், குணாதிசயமும் (Choices and Character)

தெரிவு செய்தலே செயல்பாட்டின் ஆரம்ப நிலையாகும். அது நாம், செயல்பாட்டிற்கு முன்னேறும் முதல் நிலையுமாகும். நம்முடைய சின்னச் சின்ன தெரிவு செய்தலே நம்முடைய பழக்க வழக்கங்களை தீர்மானிக்கின்றது.

பழக்க வழக்கங்களே நம்முடைய குணாதிசயங்களை உருவாக்கு கிறது. தேவனுடைய சட்டத்திற்கு மாறாக ஒருவனுடைய விருப்பமும், செயல்பாடும் இருக்கும் போது அவன் விழுந்து போகிறான். சூழ்நிலைகள் ஒரு மனிதனை உருவாக்குவதில்லை மாறாக அவனுடைய குணாதிசயமே அந்தச் சூழ்நிலைகளில் வெளிப்படுகிறது. தியோடர் என்பவர் சொன்னார். " இச்சை என்பது மொட்டாகி, பாவமாக மலர்ந்து, பிறகு மரணமாக கனிகிறது " (Lust is the bud, Sin is the blossom and death is the fruit) என்று. ஆகவே தான்,

சோதனையை (Temptation) முளையிலேயே கிள்ளி போடுங்கள். அதை வளர விடாதீர்கள். தாவீது ராஜா ஒரு மாபெரும் மனிதர். ஆனால், பாவம் அவரைத் தோற்கடித்தது. ஆகவே தான், வேதாகமம் எச்சரிக்கின்றது, "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் " (1 கொரி. 10:12) நம்முடைய பிரச்சனை, நாம் சோதிக்கப்படுகிறோம் என்பது அல்ல. மாறாக, சோதனையில் நாம் தேவனிடத்தில் திரும்புவதில்லை. அதுதான் நம்முடைய பிரச்சனை.

## IV. தைரியம் – குணாதிசயத்தை தாங்குகின்றது (Courage Sustains Character)

நம்முடைய குணாதிசயத்தை நாம் எந்தச் சூழ்நிலையிலும் வெளிப்படுத்த மிகுந்த தைரியம் தேவை. நியாயத்திற்காக, நாம் துணிந்து நிற்க வேண்டும்.

நீதியில் நடக்க, நேர்மையாக வாழ நமக்குத் துணிவு தேவை.

பிரச்சனைகள் நம்மைச் சூழும் போது, அது நம்மை மிதித்து நாசமாக்கி விடாமலிருக்க நாம் அதைத் தாங்கவும், எதிர்கொள்ளவும் நமக்குத் தைரியம் தேவை. அப்போஸ்தலன் பவுலுக்கு கூட தேவன் அவரை பலப்படுத்தும் படியாக அல்லது தைரியப்படுத்தும்படியாக, அவருக்கு உபத்திரவங்களைக் கொடுத்தாராம் (ரோமர் 5:3) பவுல் உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டி, சந்தோஷப்பட்டார். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் விலையேறப் பெற்ற ஆஸ்தியே நம்முடைய குணாதிசயம் !!

ஆகவே, நம்முடைய குணாதிசயத்தை நாம் பழுதுபார்ப்பதைவிட, அதை பாதுகாப்பதே நமக்கு சிறந்த வழியாகும். ✤

## நாளும், நடப்பும்

1. கிராமப்புறங்களில் அனைத்து மகளிர் அஞ்சலகங்களைத் திறக்க மத்திய அரசு திட்டம்.
2. கூடங்குளத்தில் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பரிசீலனை.
3. சொட்டு நீர்ப்பாசனத்திற்கு விவசாயிகள் மாற வேண்டும். - தமிழக அரசு
4. சமரசத் தீர்வு மைய சேவை சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டும். - உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி.
5. வரி ஏய்ப்பு செய்வோரின் விவரங்களை வெளியிட வருமான வரித்துறை முடிவு.
6. பாகிஸ்தானில் காஷ்மீர் தீவிரவாதிகள் செயல்படுவது உண்மை தான். - இம்ரான் கட்சி ஒப்புதல்.

# நிழலும், நிஜமும்

***(The Shadow and the Reality)***

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜகுமார்**

திருமறை ஆசான் பத்திரிக்கை வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் வாழ்த்துக்களும், ஸ்தோத்திரங்களும் சொல்லிக்கொள்கிறேன். இந்த மாதத்தில் நிழல் காலத்தின் பழைய ஏற்பாட்டுக் காலத்தின் ஆசாரியத்துவம் பற்றியும் புதிய ஏற்பாட்டின் நிஜ காலத்தின் ஆசாரியத்துவம் பற்றியும் கவனிக்கலாம் என்று ஆலோசித்து எழுதுகிறேன்.

பழைய ஏற்பாடு சீனாய் மலையில் கொடுக்கப்படுவதற்கு முன்பே ஆதி 14 ஆம் அதிகாரத்தில் மெல்கிசேதேக்கு என்கிற ஆசாரியரைப் பற்றி நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். இந்த மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுடைய ஆசாரியராயிருந்தார். அதே சமயத்தில் சாலேம் என்கிற தேசத்தின் ராஜாவாகவும் இருந்தார். இந்த மெல்கிசேதேக்கு போரில் வெற்றி பெற்று வந்த ஆபிரகாமை ஆசீர்வதித்தார். ஆபிரகாம் எல்லாவற்றிலும் இந்த ஆசாரியனுக்கு தசம பாகம் கொடுத்தார் என்று ஆதி 14:18-20. இது நமது விசுவாசத்தின் தகப்பனாக எண்ணப்பட்டவரும் முற்பிதாவுமாகிய ஆபிரகாமின் காலத்தில் இருந்த ஆசாரியத்துவம். இதன் பிறகு பழைய ஏற்பாட்டின் காலத்திலே இந்த ஆசாரியத்துவத்தைப் பற்றி சொல்லப்பட வில்லை. இந்த மெல்கிசேதேக்கு ஆபிரகாமை விட பெரியவராக எண்ணப் படுகிறார். ஏனென்றால், ஆசீர்வாதத்தைப் பெறுகிறவரை விட ஆசீர்வாதத்தை கொடுக்கிறவர் அல்லது ஆசீர்வதிக்கிறவர் பெரியவராக இருக்கிறார் (எபி. 7:6,7)

ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு அவருடைய 12 பிள்ளைகள் அவர் களுடைய எகிப்தின் அடிமைத்தனம் முடிந்து அவர்கள் பழைய ஏற்பாடாகிய கட்டளைகளைப் பெற்றுக் கொண்ட நாளில், பழைய ஏற்பாட்டின் படி அல்லது உடன்படிக்கையின் படி ஆராதனை செய்வதற்கு ஒரு ஆசாரியன் அல்லது ஒரு ஆசாரியத்துவம் தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமம் அல்லது பரிசுத்த ஆவியானவர் சொல்வது என்னவென்றால், புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தமுள்ள சந்ததியும் அதன் ஆராதனையும், ஆசாரியத்துவமும் வருகிற நாட்கள் வரை இந்த தற்காலிகமான பழைய ஏற்பாடும் அதன் ஆராதனையும் ஆசாரியத்துவமும் கொடுக்கப்பட்டது. கலா. 3:17-19 என்பது தான். ஆகவே, பழைய ஏற்பாட்டின் காலத்து ஆசாரிய ஊழியத்தை கவனிக்கும் பொறுப்பை தேவன் லேவி கோத்திரத்திற்குக் கொடுத்தார். யாக்கோபின் 12 பிள்ளைகளில் லேவியை இந்த ஊழியத்திற்காகப் பிரித்து விட்டதினால் யோசுவா காலத்தில் நிலத்தை பங்கிடும் போது லேவி கோத்திரத் தாருக்கு என்று ஒரு மாகாணம் பிரிக்கப்படவில்லை. அவர்கள் பெயரிலே

மாகாணம் இல்லாமல் போயிற்று. தேவனே அவருடைய ஊழியம் இஸ்ரவேலருடைய காணிக்கைகளே அவர்களின் பங்காக இருந்தது. எல்லா கோத்திர நிலங்களிலும் லேவி கோத்திர ஆசாரியர்களுக்காக வீடுகளும், வீட்டைச் சார்ந்த நிலம் மாத்திரம் தங்குவதற்கு கொடுக்கப்பட்டன. இந்த மாதிரியான திட்டங்களோடு லேவியர்கள் தேவனுக்கு ஊழியஞ் செய்தார்கள் (எசேக். 44:2,38) தேவன் மேசேயினிடத்தில், " உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும் அவனோடு கூட அவன் குமாரரையும் உன்னிடத்தில் சேர்த்துக் கொள் " என்று சொன்னார். (யாத். 28:1) இவ்வண்ணமாக தேவன் மோசேயின் மூலமாக ஆரோனை தம்முடைய கனமான ஆசாரிய ஊழியத்திற்கு அழைத்தார் (எபி. 5:4) தொடர்ந்து தேவன், மோசேயினிடம் " ஆரோனுக்கு மகிமையும் அலங்கராமுமாய் இருக்கும் பொருட்டு, பரிசுத்த வஸ்திரங்களை உண்டு பண்ணுவாயாக ", (யாத். 28:2) என்று கட்டளையிட்டார். (யாத். 28:3,43) பின்பு, அவர்களுக்காக செலுத்த வேண்டிய காணிக்கை முறைகளையும், பலி களையும் கட்டளையிட்டார். (யாத். 29:1; 30:38). இப்படி தேவன் ஆரோனை இஸ்ரவேல் அனைத்திற்கும் பிரதான ஆசாரியனாக ஏற்படுத்தினார். ஆரோனு டைய குமாரர்கள் அவனோடு ஆசாரியர்களாக ஊழியம் செய்தார்கள். நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். இஸ்ரவேல் முழு தேசத்திற்குமான 12 கோத்திரத்திற்கும் ஒரே நியாயப்பிரமாணம், ஒரே கூடாரம், ஒரே பலிபீடம், ஒரே பிரதான ஆசாரியன் இருந்தான். அநேக பிரதான ஆசாரியர்கள் எப்போதும் இருந்ததில்லை.

இந்த ஆசாரியத்துவத்திலே குறைகள் இருந்ததால் இந்த ஆசாரியத் துவம் மாற்றப்பட்டது என்று பரிசுத்த ஆவியானவர் தெளிவாக விவாதிக்கிறார்.

1. நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த பிரதான ஆசாரியர்கள் வயது சென்று மரித்து விடுவதால் இவர்களால் நிலையாக என்றென்றும் ஒருவரே ஆசாரியராக இருக்க முடியாது.

2. ஆகையால், பலபேர் பிரதான ஆசாரியர்களாகும் நிலை ஏற்பட்டது. ஒரே நேரத்தில் பல பேர் அல்ல. அநேக ஆண்டுகளில் கணக்கிடும் போது அநேகர் பிரதான ஆசாரியர் வேலை செய்தார்கள்.

3. இதன்படி இது மாறிப் போகிற பிரதான ஆசாரியர்களை உடையதாக மாறிப்போகிற ஆசாரியத்துவம் உடையதாயிருந்தது.

4. பிரதான ஆசாரியர்களே சில நேரங்களில் பாவம் செய்யக் கூடியவர் களாயிருந்தார்கள். அல்லது பாவத்தைத் தட்டிக் கேட்க முடியாதவர்களா யிருந்தார்கள் (எபி. 7:27)

5. சாமுவேல் புத்தகத்தில் ஏலியும், சாமுவேலும் தங்கள் பிள்ளைகளை ஒழுங்குபடுத்த முடியாத சூழ்நிலையில் இருந்தார்கள் (1 சாமு. 2:22,25; 8:1,5)

6. தன் சொந்த குடும்பத்தை சரியான வழியில் நடத்த முடியாமற் போனார்கள் (எபி. 7:28).

7. ஆகையால், இந்த ஆசாரிய முறைமையினால் பூரணப்படுதல் உண்டாகவில்லை. அதாவது, பாதாளத்தை விட்டு வெளியே வரும் அளவுக்கு பரலோகம் செல்லக்கூடிய அளவிற்கு நீதியை அந்த ஆசாரியத்துவம் கொடுக்க முடியவில்லை. (எபி. 7:11)

8. ஒரு தடவை அவர்கள் செலுத்தின பலி பரிபூரணமாக பாவத்தை மன்னித்திருந்தால் மீண்டும் மீண்டும் அவர்கள் பலி செலுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லையே, அவர்கள் வருடாவருடம் பலி செலுத்தி பாவம் இன்னும் இருக்கிறது என்பதை நினைவு கூர்ந்தார்கள் (எபி. 10:1,4; 11)

9. " ஆசாரிப்பு கூடாரத்துக்குள் பிரவேசிக்கிற போது திராட்ச ரசத்தையும், மதுவையும் குடிக்க வேண்டாம் ", என்று லேவி. 10:9ல் ஆசாரியர்களுக்கு தேவன் கட்டளையிட்டிருந்தும் சிலர் குடித்து விட்டு உட்பிரகாரத்துக்குள் பிரவேசித்தார்கள் (எசே. 44:21)

10. யாத். 32ம் அதிகாரத்தில் தேவனால் பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்ட ஆரோன்தான் கன்றுகுட்டி விக்கிரகத்தை உருவாக்கினான் (யாத். 32:1,5; 21,26; எசே. 44:12).

இப்படி மனித ஆசாரியர்கள் பெலவீனமாயிருந்தபடியால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது. ஆகையால், நியாயப் பிரமாணமும் மாற்றப்பட்டது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த நோக்கங்களில் ஒன்று; பழைய ஏற்பாடாகிய நியாயப் பிரமாணத்தையும் அதன் ஆசாரியத்துவத்தையும் முடித்து, தமது சொந்த இரத்தத்தின் பலியின் மூலமாக புதிய உடன்படிக்கையை அல்லது புதிய ஏற்பாட்டை ஸ்தாபித்து, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென் றைக்கும் அழியாத ஜீவனுக்குரிய ஆசாரியத்துவத்தை ஏற்படுத்தும்படி வந்தார் (எபி. 7:12,15,18).

| நிழல் | நிஜம் |
|---|---|
| சாகிற பாவமுள்ள மனித பிரதான ஆசாரியர்களை நியாயப்பிரமாணம் கொண்டிருந்தது. | மரணத்தை ஜெயித்து பாவமில்லாத என்றென்றுமான அழியாத ஜீவனுக்குரிய பிரதான ஆசாரியராக கிறிஸ்து இருக்கிறார் |
| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |

இஸ்ரவேல் அனைத்திற்கும் ஒரே ஒரு தேவாலயம் இருந்தது போல ஒரேயொரு தேவாலயத்திற்கு தேவன் அனுமதியளித்திருந்தது போல புதிய ஏற்பாட்டு காலமாகிய கிறிஸ்துவின் காலத்தில் இயேசு கிறிஸ்துவானவர் தம் சொந்த இரத்தத்தால் கட்டிய அவருடைய ஒரே சபை மாத்திரம் தேவனால் அனுமதிக்கப்படுகிறது (மத். 16:18; அப். 20:28). சபை என்பது கட்டிடம் அல்ல

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த கூட்டம் அல்லது மக்கள் தான் சபை. இந்த ஒரே சபைக்கு கிறிஸ்து ஒரேயொரு பிரதான ஆசாரியரே இருக்கிறார் (எபி. 3:1). வேறு பிரதான ஆசாரியர்கள் இருக்க முடியாது. அப்படியிருந்தால் அது தேவனுடைய தீர்மானத்திற்கு எதிரானது ஆகும். பழைய ஏற்பாட்டிற்கு ஆரோனையும் அவருடைய குடும்பத்தாரையும் ஆசாரியர்களாக தேவன் நியமித்தது போல கிறிஸ்துவையும் புதிய ஏற்பாட்டிற்கு பிரதான ஆசாரியராக தேவனே நியமித்தார் (எபி. 5:5,6).

ஆனால், இன்றைக்கு ஆரோனைப் போல அங்கிகள் அணிந்து கொண்டு இடுப்பிலே கயிறு கட்டிக் கொண்டு தோளிலே சால்வை அணிந்து கொண்டு தலையிலே பாகை, கையிலே கோல் பிடித்துக் கொண்டு இவர்கள் எந்த உடன்படிக்கைக்கு ஊழியம் செய்கிறார்கள். யார் இவர்களை நியமித்தது என்பதை யோசித்துப்பார்த்து அவர்களை விட்டு விலகுங்கள். இவர்கள் இன்றைக்கு குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள் இவர்களும் உண்மையை அல்லது சத்தியத்தை தெரிந்து கொள்ளமாட்டார்கள். மற்றவர்கள் சத்தியத்தை கற்றுக் கொள்வதையும் அனுமதிக்கமாட்டார்கள்.


| நிழல் | நிஜம் |
|---|---|
| 1. ஆரோன் தேவனாலே ஏற்படுத்தப்பட்டார். | 1. கிறிஸ்துவும் தேவனாலே ஏற்படுத்தப்பட்டார். |
| 2. ஆரோன் பழைய ஏற்பாட்டிற்கு பிரதான ஆசாரியராயிருந்தார் | 2. கிறிஸ்து புதிய ஏற்பாட்டின் பிரதான பிரதான ஆசாரியராயிருக்கிறார். |
| 3. ஆரோன் அந்நிய இரத்தத்தை பலியாக செலுத்தினார் | 3. கிறிஸ்துவோ தம் சொந்த இரத்தத்தை பலியாக செலுத்தினார் |
| 4. ஆரோன் பூமிக்குரிய பலிபீடத்திலே பலி செலுத்தினார் | 4. கிறிஸ்து பரலோகத்திலே தேவனுடைய சமூகத்தில் பலி செலுத்தினார் |
| 5. ஆரோனுடைய பலி பாவங்களை பரிபூரணமாக மன்னிக்கவில்லை | 5. கிறிஸ்துவின் பலி பாவத்தை பரிபூரணமாக மன்னிக்கிறது |
| 6. ஆரோனுக்கு பூமிக்குரிய வஸ்திரங்கள் ஆசாரிய உடையாக கொடுக்கப்பட்டது | 6. கிறிஸ்து ஆவிக்குரிய சரீரத்தோடு நீதியின் வஸ்திரமுடையவராயிருக்கிறார் |
| 7. ஆரோன் பூமிக்குரிய இஸ்ரவேலர்களுக்காக பரிந்து பேசினார் | 7. கிறிஸ்து ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய கிறிஸ்தவர்களுக்காகப் பேசுகிறார் |
| 8. ஆரோன் தன் சொந்த பாவங்களுக்காக முதலாவது பலி செலுத்தினார் | 8. கிறிஸ்து பாவமில்லாதவராயிருக்கிறார் |

| | |
|---|---|
| 9. ஆரோன் மரித்து உயிரோடே வரவில்லை | 9. கிறிஸ்து மரணத்தை ஜெயித்து மீண்டும் சாகாதபடி உயிர்த் தெழுந்தார் |
| 10. ஆரோன் லேவி குடும்பத்தைச் சேர்ந்தவர் | 10. கிறிஸ்து யூதா குடும்பத்தைச் சேர்ந்தவர் |
| 11. ஆரோன் ஆசாரிய ஊழியம் மாத்திரம் பார்த்தார். | 11. கிறிஸ்து பிரதான ஆசாரியராகவும், இராஜா வாகவும், தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார். |
| 12. ஆரோன் பூமிக்குரிய கூடாரத்தில் ஊழியம் செய்தார் | 12. கிறிஸ்து அவருடைய சபையில் ஊழியம் செய்கிறார் |
| 13. ஆரோன் பூமிக்குரிய கூடாரத்தில் அப்பமும் விளக்கும் பராமரித்தார் | 13. கிறிஸ்துவே சபைக்கு ஜீவ அப்பமாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார். |
| 14. ஆரோனுடைய கரத்தில் தளிர்த்த கோல் இருந்தது | 14. கிறிஸ்து இராஜ்யத்தின் நீதியுள்ள செங்கோலையுடையவராயிருக்கிறார் |
| 15. ஆரோனுடைய ஊழியம் மரணத்திற் கேதுவான ஊழியமாயிருந்தது | 15. கிறிஸ்து எல்லோருக்கும் நித்திய ஜீவனை கொடுக்கும் ஊழியம் செய்கிறார் |

இன்னும் அநேக ஒப்புமைகள் சொல்லலாம். அவைகள் அனைத்திலும் பழைய ஏற்பாட்டு ஆரோனுடைய ஊழியம் பெலவீனமானதாகவே காணப் படுகிறது. புதிய ஏற்பாட்டு நீதியையும், பரிசுத்தத்தையும், நித்திய ஜீவனையும் பரிபூரணமாகக் கொடுப்பதோடு பரலோகம் வரைக்கும் நம்மை வழி நடத்தி, இம்மையிலும், மறுமையிலும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் ஆரோனுடைய ஆசாரியத்துவமும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவமும் ஒன்றிணைக்கக்கூடாது.

இன்றைக்கு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்து ஒருவரே பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவருடைய சீஷர்கள் (கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு புதிய உடன்படிக்கைக்கு, கிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப் படிந்தவர்கள்) அனைவரும் ஆசாரியர்களாயிருக்கிறோம் (1 பேதுரு 2:5,9; வெளி. 1:6). இதில் பெரிய ஆசாரியன், சின்ன ஆசாரியன் என்று இல்லை. கிறிஸ்துவுக்குக் கீழே அனைவரும் ஒன்றே. ஆனால் இன்றைக்கு ஆரோனைப் போல உடையணிந்து நாங்கள் தான் இராப்போஜனம் கொடுப்போம், ஞானஸ்நானம் கொடுப்போம், பெயர் சூட்டுவோம், அடக்கம் செய்வோம் என்று ஆரோனைப் போல நடந்து கொள்கிறார்களே இவர்கள் எந்த உடன்படிக்கைக்கு அல்லது யாருக்கு ஊழியம் செய்கிறார்கள்? தேவன் இவர்களை நியமித்தாரா? என்பதை கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்தின் சபையிலே பொறுப்புக்கள் உள்ளன அதைப் பற்றி அடுத்த மாதம் கவனிப்போம். இங்கே, ஒரு கேள்வி. உங்கள் பிராந்திய சபையின் பிரதான ஆசாரியர் யார்? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!.

## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை



# பாடம்-29.
# பரிசுத்த வேதாகமத்தைப் புரிந்து கொள்ளுதல்

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்.

பரிசுத்த வேதாகமத்தைப் புரிந்து கொள்ளுதல் என்ற மிக முக்கியமான பாடத்தை இந்த மாதத்தில் கற்றுக் கொள்ளப்போகிறோம். ஏனென்றால், இன்றைய நாட்களில் வேதாகமத்தை சிலர் ஜோசியம் பார்ப்பது போல பார்க்கின்றனர், சிலர் வியாதியஸ்தர்களின் பக்கத்திலே வைப்பதற்குப் பயன் படுத்துகின்றனர். இன்னும் சிலர் தலையின் மீது வைத்து ஜெபம் செய்வ தற்குப் பயன்படுத்துகின்றனர். இப்படிப் பல தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தி வருகின்றனர். பரிசுத்த வேதாகமத்தைப் புரிந்து கொள்ளாமல் அநேகர் பிரிவினைகள் மற்றும் தவறான உபதேசத்தை உண்டாக்கி விடுகின்றனர். எனவே, நாம் பரிசுத்த வேதாகமத்தை சரியான விதத்தில் புரிந்து கொண்டு வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்வோம்.

### I பரிசுத்த வேதாகமம் காட்சிப் பொருளாக இல்லை; ஆராய்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டது.

பரிசுத்தாவியினால் கொடுக்கப்பட்டுள்ள வேதாகமம் நமது வீட்டின் அலமாரியை அலங்கரிப்பதற்காக ஒரு காட்சிப் பொருளாக இல்லை! அல்லது ஜோசியம் பார்ப்பது போல பார்ப்பதற்குப் பரிசுத்த வேதாகமம் கொடுக்கப்பட வில்லை அல்லது மேலே குறிப்பிட்டுள்ள அநேக காரியங்களுக்காகவும் கொடுக்கப்படவில்லை. பரிசுத்த வேதாகமம் ஆராய்ச்சி செய்வதற்காகவும் அதின்படி நடப்பதற்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணு கிறீர்களே. என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே என்றார் (யோவான் 5:39). நாம் வேத வாக்கியங்களை அதாவது, பழைய ஏற்பாட்டு வசனங்களை ஆராய்ந்து பார்த்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வை அறிந்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்தும் (ஏசா. 7:14). அவரது ஆளுகையைக் குறித்தும் (ஏசாயா 9:6,7), கிறிஸ்துவின் சபையைக் குறித்தும் (ஏசாயா 2:12; தானி 2:44) மற்றும் அவரது பாடு, மரணம், உயிர்த்தெழுதல் குறித்தும் (ஏசா. 53, சங். 110) படிக்க முடியும். அவரைக் குறித்து தீர்க்கதரிசனமாக பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதை புதிய ஏற்பாட்டில் அதின் நிறைவேறுதலைப் படித்து இப்படியாக பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டை ஆராய்ந்து படிக்கும்

படியாக தேவன் கொடுத்திருக்கின்றார் (லூக். 24:44) தேவனுடைய பிள்ளைகள் வேதத்தை ஆராய்ந்து படிப்பதில் ஆர்வமுடையவர்களாக இருந்துள்ளனர்.

எஸ்றா என்ற தேவனுடைய தாசன் கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்யவும், உபதேசிக்கவும் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தி இருந்தார் (எஸ்றா 7:10) சங்கீதக்காரன் தாவீது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியான மாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று சொல்லுகிறார் (சங். 1:2). பெரோயா பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் நற்குணசாலிகளாக இருந்தார்கள் (அப். 17:10,11) அப்போஸ்தலனாகிய பவுல் வேத வாக்கியங்கள் எல்லாம் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு) தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (கொடுக்கப்பட்டிருக் கிறது). தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள், உபதேசத் திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்கு தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்றார். (2 தீமோ. 3:16,17) அப்போஸ்தலனாகிய பேருதுவும் தம்முடைய மகிமையினாலும், காருணியத் தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி என்று எழுதுகிறார். (2 பேதுரு 1:3) அதாவது, நாம் இந்த உலக வாழ்க்கையிலே தேவ பக்தியாக வாழும்படி அவர் கொடுத் திருக்கிற வேதம் போதுமானதாக உள்ளது. எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம் (1 கொரி. 4:6) நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் (2 கொரி. 5:6). விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தி னால் வரும் (ரோமர் 10:17) விசுவாசத்தினால் வராத யாவுமே பாவம் (ரோமர் 14:23) இந்த தீர்க்கதரிசன வசனங்களோடு எதையாகிலும் கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது என்றும் அப்படிக் கூட்டவோ, குறைத்தோ சொன்னால் அப்படிப்பட்டவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது (வெளி. 22:18,19) அப்போஸ்தலனாகிய யோவான் இதை எழுதி ஆமென் என்று முடித்து விட்டார் (வெளி. 22:21) அப்படியென்றால், அதற்கு மேல் நாம் ஒன்றும் பேசக்கூடாது. வேதம் சொல்லுகிறபடியே அப்படியே ஆகட்டும் என்று அர்த்தமாக உள்ளது.

ஆனால், இன்று மனிதர்கள் வேத வசனத்தினால் திருப்பதி அடை யாமல் எதையாகிலும் விரும்பி செயல்படுகின்றனர். லாசரு, ஐசுவரியவான் உவமையில் பாதாளத்தில் இருந்த ஐசுவரியவான் பரதீசு என்று ஆறுதலான இடத்திலுள்ள லாசருவை அனுப்பி மரித்தோரிலிருந்து ஒருவன் சென்று தனது சகோதரர்களை எச்சரிக்க வேண்டும் என்று விரும்பினான். அதற்கு ஆபிரகாம் அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றார் (லூக். 16:19,31).

இன்றைய நாட்களில் மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் (பழைய ஏற்பாடு) நாம் அவர்களின் செய்திகளினாலே திருப்தி அடைய வேண்டும். வேதாகம நமக்கு போதுமானதாக உள்ளது. அது பூரணத் தன்மையுடையதாக உள்ளது. நவீன கால வெளிப்படுத்துதல் இல்லை. எனவே, அவைகளை நாம் புறக்கணிக்க வேண்டும். மனிதனுடைய கருத்துக்களும், யோசனைகளும் மற்றும் போதனைகளும் வானங்கள் மற்றும் பூமியோடுங் கூட அழிந்து

போகும் தேவனுடைய வசனம் அழியாது. (2 பேதுரு 3:10, மத். 24:35) ஆகவே, தேவனுடைய புத்தகமான பரிசுத்த வேதாகமத்தைக் காட்சிப் பொருளாக எண்ணாமல் அதை ஆராய்ந்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம் (யோவான் 5:39).

## II பரிசுத்த வேதாகமம் மூடத்தனமாக இல்லை, பகுத்துப்படிக்கும்படியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அநேகர் வேதாகமத்தை கைக்கு வந்தபடி படித்துப்பார்த்து அது எனக்குத்தான் சொல்லப்பட்டுள்ளது என்று மூடத்தனமாக செயல்படுகின்றனர். ஆனால், வேத வசனம் இப்படிப்பட்ட மூடப்பழக்கத்திலிருந்து விடுவிக்கிறது. கண்களை தெளிவாக்குகிறது பேதையை ஞானியாக்குகின்றது (சங். 19:7,8). ஆகவே, அதை பகுத்துப் படிக்க வேண்டும் (2 தீமோ. 2:15) பகுத்துப் படிக்க வேண்டும் என்றால் குழம்பிக் கொண்டு தேவன் அதை வெளிப்படுத்த வேண்டும் என்று காத்துக் கொண்டிருப்பதால்ல! வேத வசனத்திற்கு வேத வசனமே விளக்கம் கொடுக்கும்படியாக படிக்க வேண்டும். உதாரணமாக, விசுவாசம் என்றால் என்ன என்பதற்கு வேத வசனத்தைத் தேடிப்படிக்க வேண்டும். விசுவாசம் என்றால் நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி. 1:11) இப்படியாகத்தான் வேத வசனத்தைப் பகுத்து படிக்க வேண்டும்.

ஆனால், இன்று அநேகர் வேத வாக்கியங்களை ஆராய்ந்து, பகுத்துப் படிக்காமல் குழம்பிக் கொண்டு படித்து மனிதர்களிடத்தில் விளக்க கேட்க செல்லுகின்றனர். இதனால், மேலும் குழப்பத்திற்கும், பிரிவினைகளுக்கும் இடமுண்டாகுகின்றது! இன்றைக்கு அநேக சபைகளும், மார்க்க பேதங்களும் இருப்பதற்குக் காரணம் வேத வசனத்திற்கு மனிதன் தரும் விளக்கத்தை விரும்பி அதை பின்பற்றுவதால் தான். உதாரணமாக, சபை (Church) என்றால் கட்டிடத்தை ஆலயம் என்றும், ஞானஸ்நானத்தை தெளித்தல், ஊற்றுதல் என்றும் மனிதனுடைய விளக்கமாக உள்ளது. ஆனால், வேதாகமம் கூறும் விளக்கமானது சபை என்றால் இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டம் (எபி. 10:25) சபையானது கூடி வருதலைக் குறிக்கிறது. ஞானஸ்நானமானது அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டு அவரோடே (கிறிஸ்துவோடே) கூட எழுந்த செயல், (கொலோ. 2:12) மேலும், இரட்சிக்கப்பட என்ன செய்ய வேணடும்? என்ற கேள்விக்கு மனிதனின் விளக்கம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது. ஆனால், மனிதனின் விளக்கம் முதலில் இரட்சிக்கப்பட வேண்டும். பின்பு, ஒரு வருடம் கழித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று போதித்து வருகின்றன. அருமையானவர்களே, வேத வசனத்திற்கு வசனம் தான் விளக்கம் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எனவே, மனிதனுடைய விளக்கத்தைப் புறக்கணித்து தேவனுடைய விருப்பத்தை நிறை வேற்ற வேண்டும். இதுதான் பகுத்துப் படித்தலாகும். மற்றபடி கைக்கு வந்தபடி வேத வசனத்தை எடுத்து வைத்து இப்போதுதான் தேவன் இந்த வசனத்தின் மூலம் இதை வெளிப்படுத்தினார் என்று சொல்லுவது எவ்வளவு மதியீனம்! நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறு ரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

## III பரிசுத்த வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ளுவதற்காகக் கொடுக்கப் பட்டுள்ளது


ஒரே வேதாகமத்தை வைத்துக் கொண்டு இன்று அநேக பிரிவுக் கூட்ட சபைகளும் பல உபதேசங்களும், கோட்பாடுகளும் இருப்பதற்குக் காரணம் ஒரே வேதாகமத்தை பலவாறாக புரிந்து கொண்டிருப்பது தான். நாம் வேதாகமத்தை ஒரே விதமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். " எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் " (1 தீமோ. 2:4) சத்தியத்தை அறிகிற அறிவை அடைவது என்பது சத்தியத்தை ஒரே மாதிரி யாகப் புரிந்து கொள்ளுவதற்கு நம்மிடையே ஒருமைப்பாடு இருக்க வேண்டும். புரிந்து கொள்ளுதல் இல்லாமல் ஒருமைப்பாடு இல்லை. " இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ " என்று வேதம் கூறுகிறது (ஆமோ. 3:3). புதிய ஏற்பாட்டிலும் சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று போதிக்கின்றது (1 கொரி. 1:10) ஆகவே ஒருமைப்பாடே வேதாகமத்தை ஒரே விதமாகப் புரிந்து கொள்ளுவதற்கு வழிகாட்டியாக உள்ளது.


கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லுகிறவர்களுக்கிடையே கிறிஸ்து அல்லாமல் வேறு பெயர்களினால் பிரிந்து கிடக்கின்றார்கள். காரணம், வேதாகமத்தை சரியான விதத்தில் புரிந்து கொள்ளாததே! இவர்கள் அனை வரும் ஞானஸ்நானம் என்ற விசயத்திலும் ஆராதனை என்ற விசயத்திலும் அதிகமாகப் பிரிந்திருக்கின்றனர். சிலர் குழந்தையில் தெளித்தல் ஞானஸ் நானத்தை போதிக்கின்றனர். சிலர் ஊற்றுதலை ஞானஸ்நானம் என்று போதிக்கின்றனர். இன்னும் சிலர், இரட்சிக்கப்பட்டு பிறகு ஞானஸ்நானம் என்று போதிக்கின்றனர். இப்படிப்பட்ட உபதேசங்களினால் வேதாகமத்தை ஒரே விதமாகப் புரிந்து கொள்ள முடியாமல் போகிறது! அதேபோல, ஆதரானை விசயத்திலும் சிலர் சிலை வழிபாடுகளை செய்கின்றனர். சிலர் கைகளைத் தட்டி, இசைக்கருவிகளை இசைத்து நடனமாடுவதை ஆராதனை என்கின்றனர். இன்னும் சிலர் கைகளைத் தட்டி, வாய்க்கு வந்தபடி உளறி குதிப்பதை ஆராதனை என்கின்றனர்! இப்படியாக கருத்து வேறுபாடுகள் நிறைய உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் எப்படி வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்வது? ஆகவே, இப்படிப்பட்ட முரண்பாடுகளை விட்டு வெளியேற வேண்டும். அப்பொழுதுதான் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ள முடியும்.


நாம் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ளுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் ஏழு ஒன்றுகளை வெளிப்படுத்தியிருக்கிறார், அதைக் கவனியுங்கள்

1. ஒரே நம்பிக்கை
2. ஒரே சரீரம் (சபை)
3. ஒரே ஆவி
4. ஒரே கர்த்தர்
5. ஒரே விசுவாசம்
6. ஒரே ஞானஸ்நானம்
7. ஒரே தேவன் (எபே. 4:3:6) ✤


(தொடரும்)













**உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வை வளப்படுத்துவதற்கு எங்களிடம் ஆயத்தமாக உள்ள சத்தியத்தின் குரல் சர்வதேச காலாண்டு நூல்கள்**













## கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.











































Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month
Licensed to Post without pre payment
No. TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப்
பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor: S. Rajanayagam